# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 91 — 1973 දෙසැම්බර් 21 වැනි සිකුරාදා — 1973.12.21

91 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 21 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II அ) — விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் ... ... ... | 1359 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் ... | 1374 |


## பதவிகள் — வெற்றிடம்

### இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத் தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள்**

1 : 1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். "இலங்கையர்" என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தில் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1 : 2 ஏதாவது ஒரு பதவிக்கான வேட்பாளர், அப் பதவிக்கு சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அல்லது அதனினும் உயர்வான பரீட்சையில் சித்தியடைந்திருப்பது ஆகக் குறைந்த கல்வித் தகைமையென விதிக்கப்பட்டிருக்கு மிடத்து, சிங்கள மொழி மூலம் கல்வி பயின்ற சிங்கள வராக இருப்பின் அவர் சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சிங்கள மொழியில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். (1961 ஜனவரி 1 க்கு முந்திய ஒரு திகதியிலிருந்து அரச சேவையில் இருப்போருக்கும் அரச சேவையில் உள்ள பிற பதவிகளுக்கு நியமனத்தை நாடும் அத் தகையோருக்கும் இத்தேவை ஏற்புடைத்தாகாது.)

1 : 3 விதிக்கப்பெற்ற சிங்கள வினைத்திறமைத்திறன் தேர்வினில் சித்தி எய்தத் தவறியமைக்காக தகுதிகூர்/சோதனைக்கான நியமனங்கள் நிறுத்தி வைக்கப்பட்ட "புதிதாகச் சேர்ந்த" அரச உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அப்படி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமாயின் 640 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்தின் நியதிகளுக்கமைவாக விதிக்கப்பெற்ற உயர்ந்த சிங்கள வினைத்திறன் தேர்விலிருந்து விலக்களிக்கும் உரிமையை அவர்களுக்குக் கொடுக்கத்தக்க தகைமையை அவர்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

**2. படிகள்**

2 : 1 அரச சேவையில் உள்ள திருமணமான உத்தியோகத்தர்களுக்கு அவர்களது பதவிகளுக்கு ஏற்புடைய திரட்டிய மாத வேதனத்துடன் மேலதிகமாக தாபனக் கோவையின் vii ஆம் அத்தியாயத்தின் I ஆம் பிரிவில் தரப்பட்டபடி விவாகப் படியும் வழங்கப்படும்.

2 : 2 மாத வேதனம் பெறும் அரச உத்தியோகத்தர்கள், அவர்கள் 180 ரூபாவிலிருந்து 250 ரூபா வரையில் (சகல படிகளும் உட்பட) வேதனமாக/கூலியாகப் பெறும் தொகுதியினரைச் சேர்ந்தவராகின், அவர்களுக்கு விசேட படியாக ரூபா 7.50 கொடுக்கப்படும். அது தேவையானவிடத்து சரிசெய்யப்படுவதற்கு உள்ளாகும்.

---

**முக்கிய அறிவித்தல்**

*இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I: தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.*

*எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்*
*கொழும்பு,*
*1973 ம் ஆண்டு டிசெம்பர் மீ 15 ந் உ.*

---

### 3. சேவை நிபந்தனைகள் : பொது

3 : 1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விடுக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

3 : 2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

3 : 3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

### 4. நிரந்தரப் பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடைத்தாகும் சேவை நிபந்தனைகள்

4 : 1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :—

4 : 1 : 1 சகல நியமனங்களும், ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய, மூன்று வருடத்துக்குத் தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில காரணம் எதும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

4 : 1 : 2 அரசாங்க சேவையில் " புதிதாகச் சேர்ந்த " அரச உத்தியோகத்தர்கள் யாவரும் அரசாங்கத்தின் அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்துக்காக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் செய் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் தற்போதுள்ள எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அல்லது அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கு பயன் ஏற்படும் வண்ணம் இனி மேல புகுத்தக்கூடிய சட்டங்களுக்கும் விதிகளுக்கும அமையுமாறு வேண்டப்படுவர்.

4 : 1 : 3 சகல அரச உத்தியோகத்தர்களும், தமது தகுதிகூர் காலத்தினபோது அரசகரும மொழியில் வேலை செய்யும் அறிவைப் பெற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுவர்.

4 : 1 : 4 தகுதிகூர் காலம் நிறைவு எய்திய பின்பு பதவியை உறுதி செய்வது, பிறவற்றுள் நியமனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து முதலாவது வருடத்தினுள் முதலாந்தர சிங்கள வினைத்திறனைத் தேர்வில் சித்தி எய்துவதிலும் இரண்டு வருடத்தினுள் இரண்டாந்தர சிங்கள வினைத்திறனைத் தேர்வில் சித்தி எய்துவதிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடத்தினுள் மூன்றாம் தரச் சிங்கள வினைத்திறனைத் தேர்வில் சித்தி எய்துவதிலும் தங்கியுள்ளது. ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம், விதிக்கப்பட்ட காலத்துக்கு மேலதிக ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 4 : 1 : 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுள் ஏற்புடைத்தாகும் அத்தகைய காலம் வரையில் செயலில இருக்கும்.

4 : 1 : 5 தகுதிகூர் நிலைக்கால முடிவு வரையில் சிங்கள மொழியில் விதிக்கப்பெற்ற வினைத்திறனை அடையாவிட்டால் தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 12 : 13 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரயோகமாகும்.

4 : 1 : 6 சிங்கள மொழி மூலம் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் மீது 4 : 1 : 3 ஆம் 4 : 1 : 4 ஆம் 4 : 1 : 5 ஆம் பிரிவுகள் பிரயோகிக்கப்படமாட்டா.

4 : 1 : 7 அரச சேவையின், நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதி செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்கவேண்டியதில்லை.

4 : 1 : 8 தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அறிவதற்கு அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவ பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

### 5. நியமன நியதிகள்

5 : 1 அரச சேவையில், நிரந்தரமான பதவிகளிலாயினும் மாதச் சம்பளமுள்ள தற்காலிக பதவிகளிலாயினும் 1.1.72 க்குப் பின்பு நியமனம் பெற்ற அரச உத்தியோகத்தர்கள் (நாட் சம்பளம் கொடுக்கப்படுபவர்கள் நீங்கலாக) யாவரும் தமது திரட்டிய வேதனத்தின் 6 சத வீதத்தை அரசாங்க சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்துதல் வேண்டும். அரசாங்கம் நிதியாண்டின் இறுதியில் கொடுக்கப்படும் திரட்டு வேதனத்தின் 9 சத வீதத்தைக் கொடுத்துதவும். அத்தகைய பதவியை வகிப்பவர் (அவர் விரும்பினால்) அவரது மாதத்திரட்டு வேதனத்திலிருந்து 6 சத வீதம் வரையில் அவரது விருப்பப்படி, சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்தலாம். ஆனால் அத்தகைய உதவு தொகை மீது அரசாங்கம் எந்தவித தொகையும் செலுத்தாது.

5 : 2 1971.12.31 க்கு முன்பு அரச சேவையில் ஓய்வூதியமுள்ள நிரந்தரமான பதவிகளை வகித்த அரச உத்தியோகத்தர்கள் 1972.1.1 க்குப் பின்பு அச்சேவையில் உள்ள நிரந்தரமான பதவிகளில் நியமிக்கப்பட்டால் அவர்கள் அவர்களது ஓய்வூதிய உரிமைகளை வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்படுவர். அத்தகைய அரச உத்தியோகத்தர்கள் முன்புபோல விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு பணம் செலுத்துதல் வேண்டும்.

### 6. யுத்த சேவைச் சலுகை

6 : 1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப் படைகளில் சேவையாற்றியவர்களும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர் பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள், அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காது விடின், 1939 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1945 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம்

31 ஆம் திகதி வரையில் உள்ள அச் சேவைக் காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1946 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன், அவர்கள் ஆற்றிய சேவை திருப்தி கரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருந்திருத்தல் வேண்டும்.

**7. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்**

**7 : 1** எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

**7 : 2** வேட்பாளர்கள், குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

**7 : 3** ஒரு வேட்டாளரைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். வேட்டாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய வேட்பாளரைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

**7 : 4** விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பாகக் கண்டிபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவு செய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

**7 : 5** விளம்பரத் தேவைகளுக்கு அமைவுபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**8. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை**

**8 : 1** தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும்; அதில், பதில் வேதனம் படி முதலியன சேர்ந்திருக்கா.

---

## தேசிய பொதுச் சுவடிப் பொறுப்பாளர் திணைக்களம்

### பொதுச் சுவடி உதவியாளர் பதவி

தேசிய பொதுச் சுவடிப் பொறுப்பாளர் திணைக்களத்திலுள்ள பொதுச் சுவடி உதவியாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரமாகும் படிவத்திற்கேற்ப அமைக்கப்பெற்று செயலாளர், கலாச்சார அலுவல்கள் அமைச்சு, இல. 212, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு 7, என்ற முகவரிக்குப் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும் :—

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள்—1974 ஜனவரி, 25 ஆம் திகதி ;

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள்—1974 ஜனவரி, 25 ஆம் திகதி.

**குறிப்பு :**—(i) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர் ;

(ii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகவும் அண்மையிலுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பும்பொருட்டு அனுப்பலாம் ;

(iii) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாயிருக்கின்றார்களாவென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்து சசோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—

(i) இப்பதவி நிரந்தரமானதும் சகாயநிதி அடிப்படையிலானதுமாகும். தெரி செய்யப்பட்ட அபேட்சகர் தமது சம்பளத்தில் 6 வீதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தல் வேண்டும். அரசாங்க நன்கொடை, திரட்டிய சம்பளத்தில் 9 வீதமாகும். நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமான பதவிகளை வகிக்கும் அபேட்சகர்களும் ஏற்கனவே அரசசேவையிலுள்ளவர்களும் ஓய்வூதிய உரிமைகளைத் தொடர்ந்து பெறுவர்.

(ii) (அ) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் மூன்று வருட காலத்திற்குத் தகுதிகாண் நிலையில் வைக்கப்படுவர். அரச சேவையில் நிரந்தரமான நியமனத்தை வகிக்கும் உத்தியோகத்தரொருவர் தெரிவு செய்யப்பட்டால் அவர் குறிப்பிட்ட காலத்திற்குப் பதிற் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்படுவார் ;

(ஆ) அரச சேவையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் முதலில் ஒரு வருட காலத்திற்குப் பதிற் கடமையாற்றும் தரத்தில் வைக்கப்படுவதுடன் உத்தியோகத்தர் தகுதியானவரெனக் கருதப்பட்டால் அதன்பின் உறுதிப்படுத்தப்படுவார். பதிற் கடமையாற்றும் காலத்தின்போது அவர் தகுதியற்றவரெனக் கருதப்பட்டால் அவரது நிலையான பதவிக்கு அவர் திருப்பி மாற்றப்படுவார் ;

(iii) தகுதிகாண் நிலையில், திணைக்களத்தின் தலைவரால் குறிக்கப்படும் 17 ஆம் நூற்றாண்டு இடச்சு அல்லது மத்திய கால போர்த்துக்கேய மொழியில் தேர்ச்சிபெறல் வேண்டும். அத்துடன் புராதன சாசன நிர்வாகத்திலும் பயிற்சி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—

ரூபா 6,720—ரூபா 360 × 12—ரூபா 11,040 வருடாந்தம்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகமைகளையுடையவர் என்பதற்குத் திருப்திகரமான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடநலமுடையவராயும் இருத்தல் வேண்டும் ;

(ஆ) 1974.1.25 திகதியில் 30 வயதிற்கு மேற்படாதவராயும் (ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயது எல்லைகள் கவனிக்கப்படமாட்டா) ;

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தில் சரித்திரம், மொழி, சட்டம் அல்லது விஞ்ஞானத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சிறப்புப் பட்டமும் ;

(ஈ) ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றவராயும் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு :—(i)** சிங்களம் அல்லது தமிழிற் சிறந்த தேர்ச்சியும் போர்த்துக்கேய மொழி அல்லது இடச்சு மொழியில் தேர்ச்சியும் மேலதிக தகைமை யெனக் கொள்ளப்படும் ;

**(ii)** இறுதிப் பரீட்சையில் இரசாயனத்தை ஒரு பாடமாகச் செய்த விஞ்ஞானப் பட்டதாரிகளுக்கு விசேட கவனம் செலுத்தப்படும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கப்படும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின்பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டது) ;

(ஆ) பல்கலைக் கழகப் பட்டம் அல்லது மிக உயர்ந்த சான்றிதழ் ;

(இ) குணச் சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடம் இருந்து பெற்றதாய் இருத்தல் வேண்டும் :

(ஈ) உயர் தொழிற்தகைமையும் தொழில் நுட்பத் தகைமையும்/உயர் தொழிற் தகைமை அல்லது தொழில் நுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த சான்றிதழ்.

**குறிப்பு :—(i)** சாதனங்களாயினும் சாதனங்களின் படிகளேயாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக் கூடாது ;

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப் படமாட்டாது.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், கலாச்சார அலுவல்கள் அமைச்சு என முகவரி யிட்டு அனுப்பவேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம் (II) ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே கலாச்சார அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பக்காரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

ஹேமசிறி பிரேமவர்தன,
செயலாளர்,
கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
212, பௌத்தலோக மாவத்தை,
கொழும்பு 7.
1973 ம் ஆண்டு திசெம்பர் மீ 6 ஆம் வ.

மாதிரிப் படிவம்

**உதவிச் சுவடிக் காப்பாளர் பதவி—தேசிய சுவடிக்கூடத் திணைக்களம்**

1. முழுப்பெயர் : (பெரிய எழுத்துக்களில்) :————.

2. விலாசம் :————.

3. (அ) பிறந்த திகதி : வருடம் :————. மாதம்:————. நாள் :————.

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன் சரியானறு வயது :

வருடம்.:————. மாதம் :————. நாள் :————.

4. இலங்கையரா : (அ) அங்ஙனமாயின் வம்சாவழியாகவா? பதிவு காரணமாகவா? :————.
(பதிவுப் பிரஜையானல் பதிவு இலக்கமும் பதிவுப் பத்திரத் திகதியும் குறிக்கப்படல் வேண்டும்).

5. பிறந்த இடம்—

(அ) விண்ணப்பதாரர் :————.

(ஆ) விண்ணப்பதாரர் தந்தை :————.

(இ) விண்ணப்பதாரரின் தந்தை வழிப் பாட்டன் :————.

(ஈ) விண்ணப்பதாரரின் தந்தைவழிப் பாட்டனின் பாட்டன் :————.
(விண்ணப்பதாரர் இலங்கையில் பிறந்திருந்தால் " அ " வுடன் " ஆ " அல்லது " இ " வும் " ஈ " வும் நிரப்பவேண்டும். இலங்கையில் பிறக்காதவராயிருந்தால் " அ " வுடன் " ஆ " அல்லது " இ " வும் " ஈ " வும் நிரப்பவேண்டும்).

6. (அ) ஆணு/பெண்ணு :————.

(ஆ) விவாகமானவரா, ஆகாதவரா, தாரம் இழந்தவரா ? :————.

7. கல்வித் தகைமைகளும் மற்ற தகைமைகளும் :

(அ) சித்தியடைந்த அதி உயர்ந்த பரீட்சை :

| | நிலையத்தின் பெயர் | திகதி | பாடங்களும் பெற்ற பட்டமும் |
|---|---|---|---|
| 1. சிங்களம் : | ———— | ———— | ———— |
| 2. தமிழ் : | ———— | ———— | ———— |
| 3. ஆங்கிலம் : | ———— | ———— | ———— |

(ஆ) படித்த பாடசாலைகள், கல்லூரிகள் மற்றும் நிலையங்கள் :

| | நிலையத்தின் பெயர் | தொடக்கம் | வரை | பெற்ற பயிற்சி அல்லது சித்தியெய்திய பரீட்சை |
|---|---|---|---|---|
| 1. | .............................. | ............ | ............ | .............................. |
| 2. | .............................. | ............ | ............ | .............................. |
| 3. | .............................. | ............ | ............ | .............................. |

8. (அ) விண்ணப்பதாரி பணமுடை அற்றவரா? பணமுட்டு இருப்பின் எவ்வளவுக்கு? :————.

(ஆ) சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா? அங்ஙனமாயின் வழக்கின் இலக்கம், திகதி பற்றிய மற்றும் விபரங்கள் :————.

9. தற்போதைய உத்தியோகத்தினதும், முன்னைய உத்தியோகங்களினதும் விபரங்கள் :

| வேலைகொள்வோரின் பெயரும் முகவரியும் | பதவி | தொடக்கம் | வரை | சம்பளம் |
|---|---|---|---|---|
| 1. .................................... | .................. | ............ | ............ | ............ |
| 2. .................................... | .................. | ............ | ............ | ............ |
| 3. .................................... | .................. | ............ | ............ | ............ |

10. விண்ணப்பதாரியின் குணம் பற்றிச் சான்று பகரக்கூடிய இருவரின் பெயர்களும் முகவரியும்—(உறவினரற்றவராயிருத்தல் வேண்டும்) :

1. ..............................................
2. ..............................................

11. விசேட தகைமைகள் அல்லது அனுபவங்கள் பற்றிய விபரங்கள் :————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் என்னுற் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும், சரியானவையும் என நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன். இவற்றில் எவையேனும் உண்மையற்றவை, அல்லது பிழையானவையென நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன் காணப்படின், தகுதியற்றவராக்கப்படுவதற்கும், நான் தெரிவுசெய்யப்பட்ட பின் காணப்படின் நியமனத்திலிருந்து நட்டஈடு எதுமில்லாது விலக்கு தற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

12–623—21.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 91

## தேசிய நூதனசாலைத் திணைக்களம்

### நூலகப் பொறுப்பாளர் பதவி (IV ஆம் தரம்)

தேசிய நூதனசாலைத் திணைக்களத்தில் மேற்குறித்த பதவிக்காக இலங்கைப் பிரசைகளாகவுள்ள ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் பத்திரங்களைக் கீழ்க்காணும் மாதிரிப் படிவத்தின் பிரகாரம் தயாரித்து, 1974.01.21 ஆந் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் பணிப்பாளர், தேசிய நூதனசாலைத் திணைக்களம், அஞ்சற் பெட்டி 584, கொழும்பு 7 என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

**குறிப்பு.**—விண்ணப்பப் பத்திரம் தபாலில் தொலைந்து விட்டதாகவோ, தாமதமாகி விட்டதாகவோ செய்யப்படும் முறைப்பாடுகள் கவனத்துக்கெடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. தங்களுடைய விண்ணப்பங்களை அனுப்புவதற்கு இறுதிநாள் வரைக்கும் தாமதப்படும் விண்ணப்பகாரர்கள் தங்களுடைய சொந்த ஆபத்தின் பேரிலேயே அவ்வண்ணம் செய்பவராவர்.

2. **வேதனமும் படிகளும்.**—இப்பதவி வருடமொன்றுக்கு ரூ. 6,600—180 × 8 ஐயும் 240 × 6—9,480 ரூபாவையும் கொண்ட திரட்டிய வேதன அளவுத் திட்டத்தையுடையது. 7,500 ரூபாவையும், 8,280 ரூபாவையும் பெறுவதற்கு முன் வினைத்திறமை காண் தடை உண்டு.

3. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்.**—இப்பதவி நிரந்தரமானது. நியமனம் ஏற்பாட்டு நிதியத்தின் பேரில் அமையும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் ஏற்கனவே ஓய்வூதியத்துடன் கூடிய அரசாங்கத்தின் கீழ் ஓய்வூதியமுடைய பதவி வகிக்காதவராகவிருந்தால் அவர் தனது வேதனத்தின் **9 நூற்று** வீதத்தை அரசாங்க சேவை ஏற்பாட்டு நிதியத்திற்கு உதவு தொகையாகச் செலுத்துதல் வேண்டும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பகாரர் அரசாங்க சேவையில் ஓய்வூதியத்துடன் கூடிய பதவியை நியமிப்புத் திகதியில் வகிப்பவராகவிருந்தால் அவர் தொடர்ந்தும் அந்த ஓய்வூதியத்துக்கு உரித்துடையவராவார். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் தற்பொழுது அரசாங்க சேவையைச் சேராதவராகவிருந்தால் ஆரம்பத்தில் அவர் மூன்று வருடம் தகுதிகூர் நிலையில் வைக்கப்படுவார். அரசாங்க சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமான பதவியை வகிக்கும் உத்தியோகத்தரொருவர் தெரிவு செய்யப்பட்டால் அவர் ஒரு வருட காலத்துக்குப் பதில் உத்தியோகத்தராகவே நியமிக்கப்படுவார்.

4. **தகைமைகள்.**—விண்ணப்பகாரர்கள்—

(அ) விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினத்தில் 21 வயதுக்குக் குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.) ;

(ஆ) நல்லொழுக்கமும் நல்ல தேகாரோக்கியமும் உடையவராக விருத்தல் வேண்டும் ;

(இ) அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருக்க வேண்டும். அத்துடன் இலங்கை நூலகச் சங்கத்தின் இடைத் தேர்வுப் பரீட்சையில் சித்தி அல்லது களனிட்ட பல்கலைக் கழகக் கல்லூரியொன்றில் நூலகவியல் துறையில் டிப்புளோமா அல்லது அதற்கு நிகரான தகைமை பெற்றிருத்தல் வேண்டும் ;

(ஈ) மேலே குறிப்பிட்ட தகைமைகளுடன் அத்துறையில் 10 வருட அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும் ;

(உ) வகுப்பு IV ஐச் சேர்ந்த நூலகப் பொறுப்பாளர்கள் ரூ. 8,040 (திரட்டு) வேதனத்தைக் கடத்தற்கு முன்னர், இலங்கை நூலகச் சங்கத்தின் இறுதித் தேர்வு அல்லது அதனை ஒத்த பரீட்சையொன்றில் சித்தி பெறல் வேண்டும்.

(ஊ) சிங்களம், ஆங்கிலம் என்பவற்றுடன் இயற்கையியல் பாடங்களுள்/கீழ்த்திசை மொழிகளுள் ஒன்றில் அறிவு பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமனான பரீட்சை அல்லது அதனிலும் உயர்ந்த பரீட்சைச் சான்றிதழும் இலங்கை நூலகச் சங்கத்தின் இடைத் தேர்வுப் பரீட்சை அல்லது அதற்கு நிகரான பரீட்சையில் சித்தியும் 10 வருட அனுபவமுமுடைய இந்தத் திணைக்களத்து உத்தியோகத்தர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

5. கீழ்க்காணும் சாதனங்களில் ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ கேட்கும் பட்சத்தில் விண்ணப்பதாரர் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு.**—சமய தீட்சைச் சான்றிதழோ, உதவிபெறும் பாடசாலை ஒழுங்கு விதிக் கோவைத் தேவை நோக்கில் வழங்கப் பெற்ற சான்றிதழோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது) ;

(ஆ) மேலேயுள்ள பந்தி 3 (இ) இல் விதிக்கப்பட்டுள்ள கல்வித் தகைமைச் சான்றிதழ் ;

(இ) செய்முறை அனுபவம் பற்றிய சான்றிதழ் ;

(ஈ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைகளின் சான்றிதழ் ;

(உ) அன்மையில் பெற்றுக்கொண்ட குணச்சான்றிதழ்கள் இரண்டு.

**குறிப்பு.**—(1) விண்ணப்பத்துடன் சாதனங்களோ அல்லது சாதனங்களின் பிரதிகளோ இணைத்து அனுப்பப்படலாகாது.

(2) கேட்கப்படும் பொழுது சாதனங்களைச் சமர்ப்பிக்கத்தவறும் விண்ணப்பகாரரின் விண்ணப்பங்கள் கவனத்துக்கெடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தத்தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

7. விண்ணப்பத்தையும் அதனுடன் தொடர்புடைய சாதனங்களையும் தேசிய நூதனசாலைத் திணைக்களப் பணிப்பாளருக்கு அனுப்புதல் வேண்டும். அவற்றை, திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் எவரினதும் சொந்தப் பெயருக்கு அனுப்புதலாகாது.

8. தெரிவு செய்யப்படும் விண்ணப்பகாரர் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துதற்கும் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்கும் ஏற்கனவே செய்யப்பட்டுள்ள அல்லது இனிமேல் செய்யப்படவுள்ள எந்த விதிக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

இந்த வர்த்தமானியின் I ஆம் பாகத்தின் (II அ) ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள, அரசாங்க சேவைப் பதவி நியமிப்புகளுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளையும் கருத்திற் கொள்க.

பி. எச். டி. எச். டீ சில்வா,
பணிப்பாளர்,
தேசிய நூதனசாலேத் திணைக்களம்.

தேசிய நூதனசாலேத் திணைக்களம்,
தபால் பெட்டி 854,
கொழும்பு 7.
1973 ம் ஆடு டிசெம்பர் மீ 12 ந் உ.

### மாதிரிப் படிவம்

(முக்கிய குறிப்பு.—விண்ணப்பப் படிவங்கள் 8½" × 13½" அளவுடைய கடதாசியில் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தை வைத்து அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலேயில் "நூலகப் பொறுப்பாளர் பதவிக்கான விண்ணப்பம்" என்று குறிப்பிட்டுப் பதிவுத் தபாலில் தேசிய நூதனசாலேத் திணைக்களப் பணிப்பாளருக்கு அனுப்புதல் வேண்டும்.)

**தேசிய நூதனசாலேத் திணைக்களத்தின் நூலகப் பொறுப்பாளர் பதவிக்கான விண்ணப்பம்**

1. பெயர் (முதலெழுத்துடன்) திரு./திருமதி/செல்வி :————.
2. முதலெழுத்துக்களினுல் காண்பிக்கப்படும் பெயர்கள் :————.
3. முகவரி :————.
4. (அ) இலங்கைப் பிரசையா :————.
   (ஆ) அவ்வாருக வம்சாவழி மூலமா? பதிவு செய்ததன் மூலமா? வம்சாவழி மூலமெனின் பின்வருபவர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடுக :—
   (i) விண்ணப்பகாரர் :————.
   (ii) விண்ணப்பகாரரின் தந்தை :————.
   (iii) விண்ணப்பகாரரின் தந்தையின் தந்தை :————.
   (iv) விண்ணப்பகாரரின் தந்தையின் தந்தையின் தந்தை :————.
5. பிறந்த திகதி :—
   வருடம் :————. மாதம் :————. திகதி :————.
6. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினத்தில் வயது :—
   வருடம் :————. மாதம் :————. திகதி :————.
7. திருமணமானவரா? திருமணமாகாதவரா? :————.
8. கல்வித் தகைமைகள் :—

| பரீட்சை/பட்டம் | வருடம் | [illegible] |
|---|---|---|
| | | |

9. செய்முறை அனுபவம் :—

| வகித்த பதவிகளும் கடமைகளின் தன்மையும் | சேவை புரிந்த இடங்கள் | காலம் |
|---|---|---|
| | | |

10. தற்பொழுது வகிக்கும் பதவி பற்றிய விபரங்கள் :—
    (அ) பதவி :————.
    (ஆ) திணைக்களம்/நிறுவனம் :————.
    (இ) நியமிப்புத் திகதி :————.
    (ஈ) நிரந்தரமானதா? ஓய்வூதியமுடையதா? தற்காலிகமானதா? :————.
    (உ) பதவி உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா? :————.
    (ஊ) வேதன அளவும் தற்பொழுது கிடைக்கும் வேதனமும் :————.
11. உங்களைப் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ளக்கூடிய இருவருடைய பெயர்களும் முகவரிகளும் :—
    1. ————.
    2. ————.
12. குறிப்புரைகள் :————.

இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னுல் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இங்குள்ள தகவல்களில் ஏதாவதொன்று பொய்யானதென்றே பிழையானதென்றே என்னைத் தெரிவு செய்வதற்கு முன் கண்டு பிடிக்கப்பட்டால் நான் தகுதியிழந்தவனுவேன் என்பதையும் நியமிப்பின் பின் கண்டு பிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி நான் சேவையிலிருந்து விலக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

————,
திகதி :————. விண்ணப்பகாரரின் ஒப்பம்.

விண்ணப்பகாரர் அரசாங்க சேவையைச் சேர்ந்தவராயிருந்தால் அவர் பற்றித் திணைக்களத் தலைவரின் அறிக்கை.

————,
திகதி :————. திணைக்களத் தலைவரின் ஒப்பம்.

12-754—21.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 91

---

இல. : எஸ். எச். 332/60

**பொலிஸ் திணைக்களம்**

இயந்திர வேலைக்கான பொலிஸ் கொஸ்தாபல் தேர்வு

கீழேயுள்ள 4 ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ள தகைமைகள் உடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து இலங்கை பொலிஸ் சேவையில் இயந்திர வேலைக்கான பொலிஸ் கொஸ்தாபல் பதவிகளுக்கு பின் வரும் தொழில்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :—

தகரம் ஒட்டுவோர்
மையூசுவோர்
ஆசன அமைப்பாளர்
இயந்திர தொழிலாளர்.

மேற்காணும் தொழில்களில் தகைமை உடையோர் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்.

2. விண்ணப்பங்கள் கீழ்க்காணும் மாதிரிப்படிவத்தில் பணிப்பாளர், போக்குவரத்தும் தொடர்புகளும், பொலிஸ் போக்குவரத்து அலுவலகம், நாராஹேன்பிட்டி, கொழும்பு-5 என விலாசமிட்டு, அவருக்கு 74.01.31 ஆம் திகதியோ அதற்கு முன்பாகவோ அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலேயில் "இயந்திர வேலைக்கான பொலிஸ் கொஸ்தாபல் பதவிகளுக்கான விண்ணப்பங்கள்" என குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படவேண்டும்.

3. (அ) அரச சேவையில் உள்ள தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் அவரவர் திணைக்களத் தலைவர்கட்கூடாக அனுப்பிவைக்கப்படவேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர்கள் அவசியமான விபரங்களை தம் சொந்தக் கையெழுத்தால் நிரப்பி கோரப்படும் சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2 ஆம் பந்தியில் கொடுக்கப்பட்ட முகவரிக்குத் தம் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும். எச்சந்தர்ப்பத்திலாயினும் யாராவது உத்தியோகத்தரின் பெயருக்கோ அல்லது பொலிஸ் அதிபருக்கோ விண்ணப்பங்கள் அனுப்பப்படக்கூடாது.

4. **சம்பள விகிதம் :** ரூ. 3,000—90×3—ரூ. 3,270—ரூ. 3,432—144×14—ரூ. 5,448 வருடாந்தம் (திரட்டிய சம்பளம்).

5. **வேண்டப்படும் தகைமைகள் :**

(அ) வயது எல்லே.—18 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருக்கவேண்டும்.

குறிப்பு.—20.3.1958 ஆம் திகதிய இல. 434 உள்ள திறைசேரி சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வயதுச் சலுகை ஆயுதப்படைகளின் முன்னுட் சேவையாளர்களுக்குப் பொருந்தும்.

5. (ஆ) **கல்வித்தகைமையும் ஏனைய தகைமைகளும்.**—

(i) **கல்வி :** சிங்களம், தமிழ், அல்லது ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஒன்றிலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளிலோ வாசிக்கவும் எழுதவும் ஆற்றல் அவசியம்.

(ii) **தொழில் :** விண்ணப்பதாரர்கள் ஒரு பிரபலம்வாய்ந்த மோட்டார் எஞ்சினியரிங் நிறுவனத்திலோ அல்லது ஏதாவது ஒரு அரசாங்க திணைக்களத்திலோ 4 வருடங்களுக்குக் குறையாமல் தொழில்பயில் நிலையை திருப்திகரமாக நிறைவேற்றியிருக்கவேண்டும்.

(iii) **கண்பார்வைத் தேவைகள் :** ஒவ்வொரு கண்ணிலும் 6/12 க்குக் குறையாத பார்வை இருக்கவேண்டும். ஒரு கண்ணில் பார்வை 6/6 ஆக இருந்து மற்றைய கண்ணில் பார்வை 6/18 ஆக இருப்பினும் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருக்கவேண்டும்.

(iv) வைத்திய பரிசோதனை : ஒரு வைத்தியப் பரிசோதனையில் சித்தியெய்தவேண்டும்.

6. **ஆட்சேர்க்கும் முறை :**

விண்ணப்பதாரர்கள், நாராஹேன்பிட்டி, பொலிஸ் போக்குவரத்து அலுவலகம், போக்குவரத்து தொடர்புகள் பணிப்பாளரால் நடாத்தப்படும் ஒரு தொழிற் பரீட்சையில் சித்தியெய்த வேண்டியிருப்பர்.

7. **சேவைக்கமர்த்தும் விதிகள் :**

இப்பதவி நிரந்தரமானது. நியமனம் பெறுவோர் 3 வருடகால திறமைகாண் நிலையில் வைக்கப்படுவர். அவர்கள் அரசாங்க சேவை சேமலாப நிதிக்கு கட்டுப்பணம் செலுத்துவார்கள். 1.1.1972 ஆம் திகதிக்கு முன்பு இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரிய பதவிகள் வகித்தோர் இளைப்பாற்றுச் சம்பள உரிமையை உடையோராவதோடு, விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்கும் கட்டுப்பணம் செலுத்துவார்கள். இயந்திர வேலைக்கான பொலிஸ் கொஸ்தாபல்மார் எல்லோரும் திணைக்கள நிதிகளுக்குக் கட்டுப்பணம் செலுத்த வேண்டியிருக்கும்.

8. **சேவை நிபந்தனைகள்.**—(i) தெரிவு செய்யப்படுவோர் மூன்று வருடகால தகைமைகாண் நிலையில் வைக்கப்படுவர்.

(ii) தெரிவு செய்யப்படுவோர் தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயம் 10 : 1, 10 : 9 ஆகிய உபபிரிவுகளுக்கு உட்பட்டு நடக்கவேண்டியிருக்கும்.

(iii) தெரிவுசெய்யப்படுவோர் அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கமைய, குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசமொழிச் சட்டத்தின் சரத்துகளை அமுல்செய்யும்முகமாக, இதுவரை ஏற்படுத்தப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஏற்படுத்தப்படும் விதிகளுக்கோ அமைய நடக்கவேண்டியிருப்பர்.

(iv) தெரிவுசெய்யப்படுவோர் அரசமொழிக் கொள்கையின் பிரகாரம் "புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்கள்" ஆயின் தம் தகுதிகாண் நிலைக்காலத்தில் சிங்கள மொழியில் தகைமை பெற வேண்டும். தகைமைகாண் நிலைக்காலம் முடிவடையும்போது அவர்களின் சேவை நிரந்தரமாக்குதல், மற்றும் தகைமைகளுக்கு உட்பட, குறிப்பிட்ட சிங்கள மொழித் தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியெய்துவதைப் பொறுத்திருக்கும்.

தகுதிகாண் நிலைக் காலத்துள் குறிப்பிட்ட தரத்தில் சிங்கள மொழித்தேர்ச்சி பெறத் தவறுவோர் சேவையிலிருந்து நீக்கப்படலாம். எனினும், அவர்கள் அரச மொழி, கற்பதற்கு உண்மையான முயற்சி செய்தார்கள் என நியமன அதிகாரிகள் திருப்தி அடையின் இப்படியான சேவை நீக்கத்தை ஒத்திவைக்கலாம். உரிய காலத்தின் பின்னர் நியாயமான கால எல்லையுள் பரீட்சையில் சித்தியெய்துவராயின் நியமன அதிகாரிகள் தம் தற்றுணிபுடன் சேவைமூப்பில் ஏற்படும் நஷ்டத்தை அகற்றலாம்.

(v) சிங்கள மொழிமூலம் அரச சேவையில் சேர்த்துக்கொள்ளத் தகைமை பெறும் உத்தியோகத்தர்கள் இத்தேர்ச்சிப் பரீட்சைக்குத் தோற்றவேண்டியதில்லை.

(vi) தெரிவுசெய்யப்படுவோர் இத்திணைக்களக் கட்டளைகளுக்கும், பொலிஸ் ஒழுக்காற்றுக் கோவைக்கும், பொலிஸ் அதிபரினாலோ அரசாங்கத்தாலோ காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் வேறு எந்தக் கட்டளைகளுக்கோ இணங்கி நடக்கவேண்டியிருக்கும்.

9. இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (II அ) வின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட அரசசேவைகளில் நியமனங்களுக்கு ஏற்புடையதான போது நிபந்தனைகளைக் கவனிக்கவும்.

10. இயந்திர வேலைக்கான பொலிஸ் கொஸ்தாபல்மார்களுக்கு (அ) இலவச வசிப்பிடம், (ஆ) கிற் பெட்டி, துடைப்பான், சப்பாத்துகள், சுத்திகரிப்பு உபகரணங்கள், (இ) பனியன்கள் உட்பட இலவச கோலவுடைகள் ஆகியவை கொடுக்கப்படும்.

11. விண்ணப்பகாரர்கள் தங்கள் விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளை இணைத்து அனுப்பவேண்டும் :—

(அ) பிறப்புச் சான்றிதழ்,

(ஆ) அண்மையில் பெற்ற ஒழுக்கம் பற்றிய சான்றிதழ்கள் இரண்டு,

(இ) 4 வருடகால தொழில் பயில் நிலைக்காய சான்றிதழ்.

12. விண்ணப்ப முடிவு திகதிக்குப் பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும், இப் பிரசுரத்திற்கமையாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு.**—பரீட்சைகளுக்கும் நேர்முகப் பரீட்சைகளுக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு பிரயாணச் செலவுகள் கொடுக்கப்படமாட்டா.

டீ. எஸ். ஈ. பீ. ஆர். சேநாநாயக,
பொலிஸ் அதிபர்,

பொலிஸ் தலைமைக் காரியாலயம்,
கொழும்பு—1,
1973.12.11.

**விண்ணப்பப் படிவம்**

1. விண்ணப்பதாரரின் முழுப் பெயர் :————.
(பெரிய எழுத்துக்களில்)

2. முகவரி :————.
(பெரிய எழுத்துக்களில்)

3. பிறந்த திகதியும், 74.01.31 ஆம் திகதியில் வயதும்:————
(i) தேசிய இனம் :————.
(ii) பதிவினாலோ அல்லது பரம்பரையினாலோ இலங்கையர் : ————.
(பதிவு செய்யப்பட்ட பிரஜையானால் பதிவு செய்யப்பட்ட சாட்சிப்பத்திரத்தின் பிரதியை இணைக்கவும்)
(iii) பதிவினால் அல்லது பரம்பரையால் இலங்கையராயின் பின்வருவோரின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :—.
(அ) விண்ணப்பதாரர் :————.
(ஆ) விண்ணப்பதாரரின் தகப்பன் :————.
(இ) விண்ணப்பதாரரின் தகப்பன்வழிப் பாட்டனார் :————.
(ஈ) விண்ணப்பதாரரின் தகப்பன்வழிப் பூட்டனார் :————.
(விண்ணப்பதாரர் இலங்கையில் பிறந்திருந்தால் (அ) வை நிரப்புவதோடு (ஆ) வையோ அல்லது (இ) (ஈ) வையோ நிரப்பவேண்டும். விண்ணப்பதாரர் இலங்கையில் பிறக்காவிடின் (அ) வை நிரப்புவதோடு (ஆ) (இ) (ஈ) வை நிரப்பவேண்டும்).

4. கல்வித் தகைமைகள் :
(அ) எவ்வகுப்பில் சித்தியெய்தியிருக்கிறீர் :————.
(ஆ) சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் வாசிக்கவும் எழுதவும் முடியுமா :————.

5. தொழில் தகைமைகள் :————.
(தொழில்பயில் நிலைக்காலம் முதல் தொழில் பார்க்கும் காலம் வரையிலான உங்கள் தொழில் தகைமைகளை விபரமாகக் கூறுக. சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்).

6. மோட்டார் வாகனம் செலுத்தும் அறிவு ஏதும் உண்டா ? : ————.
(லொறிகள், மோட்டார் கார்கள் ஆகியன செலுத்தவும் மோட்டார் சயிக்கிள்கள் ஓடவும் ஆணைப்பத்திரம் (லைசென்ஸ்) வைத்திருக்கிறீரா).

7. ஏதாவது விசேட தகைமைகள் :————.

8. தற்போதய தொழில் :————.
(அரசாங்க சேவையிலாயின் விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்கட்கூடாக அனுப்பப்பட வேண்டும்).

9. நீங்கள் அரசாங்கத்தின் கிழ் எப்போதாவது சேவை செய்திருக்கிறீர்களா ? அப்படியாயின் கால எல்லைகள், திணைக்களம், வகித்த பதவி, எச்சந்தர்ப்பத்தில் அத்திணைக்களத்தைவிட்டு நீங்கினீர்கள் ? :————.

10. ஒழுக்கம் பற்றிய சான்றிதழ்கள் பெற்ற இருவரின் பெயர்கள், முகவரிகள், பதவிகள் ஆகியவற்றைத் தருக :————.
1. :————.
2. :————.
(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்).

11. இலங்கைப் பொலிஸ் சேவையில் சாரதி அல்லது கொஸ்தாபல் பதவிக்கு முன்பு விண்ணப்பித்தீரா, அப்படியாயின் அதன் பெறுபேறுகளைக் குறிப்பிடுக. தொடர்பு இலக்கம் உண்டாயின் குறிப்பிடுக :————.

12. ஆயுதப் படைகளில் முன்பு இருந்தீரா, அல்லது இப்போது இருக்கிறீரா அல்லது இலங்கையிலுள்ள பிரித்தானிய தளங்களில் தொழில் பார்த்தீரா :————.
(சேவையிலிருந்து விடுபட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும்).

13. நீங்களோ அல்லது உங்கள் உறவினர் யாராவதோ ஏதாவது குற்றத்துக்காக தொடர்புபடுத்தப்பட்டோ, கட்டளை பிறப்பிக்கப்பட்டோ, குற்றஞ்சாட்டப்பட்டோ, குற்றவாளியாகக் காணப்பட்டோ இருக்கிறீர்களா ? :————.

எனது அறிவிற்கு எட்டியவரை மேற்காணும் விபரங்கள் உண்மையானதும் சரியானதும் என்று இத்தால் உறுதிப்படுத்துகிறேன். மேற்காணும் தகவல்கள் ஏதேனும் பிழையானது என்றோ அல்லது பொய்யானது என்றோ காணப்படின் (சேவையில் அமர்த்தப்பட்டிருப்பின்) பொலிஸ் திணைக்களச் சேவையிலிருந்து நான் உடனடியாக நீக்கப்படுவேன் என்றும் தெரிந்துகொண்டேன்.

————,
இடம் :————. விண்ணப்பதாரரின் கையொப்பம்.
திகதி :————.

12-748—21.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 91

## இலங்கைத் தரைப்படைத் தலைமை நிலையம்

### உறுதுணைவர் பதவி (சிவில்)

சேனாபதியின் கீழ் உறுதுணைவர் பதவிக்கு இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இதன் கீழ்க் காணப்படும் படிவத்தில் உள்ளபடி தயாரிக்கப்பட்டு விண்ணப்பதாரரின் சொந்தக் கையெழுத்தினால் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் குடியியல் நிருவாக உத்தியோகத்தர், தபாற் பெட்டி இலக்கம் 553, கொழும்பு 3 என்ற விலாசத்திற்கு பதிவுத் தபாலில் 1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

2. **சம்பள அளவுத் திட்டம்.**—ஆண்டொன்றிற்கு ரூபா. 6,240—7×180—ரூபா 7,500 (திரட்டிய சம்பளம்).

3. **வயதெல்லை.**—விண்ணப்பதாரர் 40 வயதிற்கு மேற்படாமலும் 23 வயதிற்கு கீழ்ப்படாமலும் இருத்தல் வேண்டும். அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கு மேற்கூறிய வயது வரையறை ஏற்புடையதன்று.

4. **கல்வியும் மற்றைய தகைமைகளும்.**—(i) ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தன் சிரேட்ட தராதரப்பத்திரம் அல்லது அதற்குச் சமமான அல்லது அதற்குக்கூடிய பரீட்சையில் சித்தியடைந்திருக்கின்றார் என்பதற்குப் போதிய அத்தாட்சி காட்ட வேண்டும்.

(ii) ஆங்கிலத்தில் நிமிடத்துக்கு 120 சொற்களுக்குக் குறையாத வேகத்தில் சுருக்கியெழுதக்கூடியவர்களாகவும், நிமிடத்திற்கு 40 சொற்களுக்குக் குறையாமல் தட்டச்சிலிடக்கூடியவர்களாகவும் விண்ணப்பதாரர்கள் இருக்கவேண்டும். அவர்கள் கடிதங்களுக்கு காட்டிய வழியில் பதில் வரையக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும். (சிங்களச் சுருக்கெழுத்து, சிங்கள தட்டெழுத்து பற்றிய அறிவுடைய அபேட்சகர்களுக்குச் சிறப்புச் சலுகை வழங்கப்படும்.)

(iii) செயலக வேலையில் அனுபவமுடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

(iv) விண்ணப்பதாரர்கள் மிகச் சிறந்த ஒழுக்க நடத்தையுடையவராகவும், உடல் நலம் வாய்ந்தவராகவும் இருக்க வேண்டும்.

5. **நியமன விதிகள்.**—இப்பதவி நிரந்தரமானது. இந்நியமனம் சகாயநிதி அடிப்படையில் அமையும். அரசாங்க சேவையில் 1971.12.31 ல் உபகாரச் சம்பளம் பெறுபவர் இப்பதவிக்கு நியமனம் செய்யப்பட்டால் 1971.12.24 ல் வெளியான பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 42 ன் படி அவருடைய எதிர்கால உபகாரச் சம்பள உரிமைகள் அமையும்.

தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர், 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழி அதிகாரச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கும் இப்பொழுதுள்ள அல்லது வருங்காலத்தில் புகுத்தக்கூடிய எந்தச் சட்டங்களுக்கும் பிரமாணங்களுக்கும் இணங்கி நடப்பார் என்னும் நிபந்தனைக்குட்படுமாறு அவர் வேண்டப்படுவார்.

6. **சேவை நிபந்தனைகள்.**—அரசாங்க சேவையில் நியமனங்கள் பெறுவதற்குரிய சேவைப் பொது நிபந்தனைகள் இவ்வரசாங்க வர்த்தமானியின் முதலாம் பகுதியின் இரண்டாம் உட்பிரிவின் ஆரம்பத்தில் பார்த்துக்கொள்க.

7. விண்ணப்பதாரர்கள் கீழ்வரும் சான்றிதழ்களின் பிரதிகள் (மூலப் பிரதிகளல்ல) விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

(i) பிறப்புச் சான்றிதழ் (ஞானஸ்நான சான்றிதழ்களோ அல்லது உதவி நன்கொடைபெறும் பாடசாலைப் பிரமாணங்களுக்கிணங்க வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்களோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ii) மேற்படி 4(ii), (iii) ஆம் பந்தியிற் கூறப்பட்ட கூடுதலான கல்வித் தகைமைகளையும் மற்றைய தகைமைகளையும் காட்டும் சான்றிதழ்கள்.

*குறிப்பு.*—சான்றிதழ்களினதும் நற்சாட்சிப் பத்திரங்களினதும் பிரதிகள் திருப்பி அனுப்பப்படமாட்டாது.

(iii) விண்ணப்பதாரரின் குணநலம், தகுதி சம்பந்தமான அண்மையில் பெற்ற இரண்டு சான்றிதழ்கள் (அரசாங்க சேவையில் இருக்கும் விண்ணப்பதாரர்கள் நற்சான்றிதழ்கள் அனுப்பத் தேவையில்லை).

8. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தரது விண்ணப்பங்கள் அன்னவரின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அவ்விண்ணப்பங்களை திணைக்களத் தலைவர்கள் அனுப்பும்போது விண்ணப்பதாரர் குறுகிய அறிவித்தலில் நியமனத்தைப் பெற விடுவிக்கப்படுவாரா என்பதைக் குறிப்பிடல் வேண்டும்.

9. கொழும்பில் நடக்கும் ஒரு பரீட்சைக்கும் நேர்முகப் பரீட்சைக்கும் சமூகமாயிருப்பதற்கு விண்ணப்பதாரர்கள் ஆயத்தமாயிருக்கவேண்டும். இது விடயமாக பிரயாணச் செலவு கொடுக்கப்படமாட்டாது.

அமரசிறி நாணயக்கார,
குடியியல் நிருவாக உத்தியோகத்தர்.

1973 தெசம்பர் மாதம் 8 ந் திகதி,
தரைப்படைத் தலைமை நிலையம்,
தபாற் பெட்டி இலக்கம், 553,
கொழும்பு 3.

#### மாதிரி விண்ணப்பப் படிவம்

#### உறுதுணைவர் பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப் பெயர் :————.
   (அ) குடும்பப் பெயர் :————.
   (ஆ) மற்றைய பெயர்கள் :————.
2. தபால் விலாசம் :————.
3. தேசிய இனம், அது எவ்வாறு பெறப்பட்டது :————.
4. (அ) பிறந்த திகதியும் இடமும் :————.
   (ஆ) 1974 ஜனவரி 23 ஆம் திகதியன்று வயது :————.
5. பாலினம் :————.
6. விவாகமானவரா அல்லது தனித்தவரா ? :————.
7. கூடுதலான கல்வித் தகைமைகள் :————.
8. அனுபவம் பற்றிய விபரங்கள் :————.
   (இவ்விளம்பரத்தின் 4(ii), (iii) ஆம் பந்தியைப் பார்க்கவும்.)
9. தற்போதைய தொழில் (ஏதாவது உண்டானால்) :————.
10. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்தவர்களின் பெயர்களும் நியமனங்களும் :—
    (i) ————.
    (ii) ————.
11. வேறேதும் தகவல்கள் உளவாயின், அவை :————.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

12-703—21.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 91

---

## கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம்

### தகவல்/வெளியீட்டு உத்தியோகத்தர் பதவி (சிங்களம்) தரம் II
### நூலகப் பொறுப்பாளர் பதவி தரம் II

இந்நிறுவகத்தின் மேற்படி பதவிகளுக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்நிறுவகத்திலிருந்து பெறக்கூடிய விண்ணப்பப் படிவத்தில் தயாரிக்கப்பட்டு, தேவையான சாதனங்களுடன், 1974 ஜனவரி 8 ஆந் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக, பணிப்பாளர், கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம், 33, எலிபாங் வீதி, கொழும்பு 5 என்னும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பங்களை நேரியோ அல்லது தபால் மூலமோ பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர் தமது முகவரியுடன் கூடிய முத்திரையொட்டப்பட்ட தபால் உறையை அனுப்பிப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிக்கு விண்ணப்பிப்போர், ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

#### தகவல்/வெளியீட்டு உத்தியோகத்தர் பதவி (சிங்களம்) தரம் II

**தகுதியும் அனுபவமும் :—**

1. (அ) க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் சிங்களப் பாஷையுட்பட, 4 பாடங்களில் சித்தியும், அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் இடைநிலைப் பரீட்சையில் சிங்களப் பாஷையுடன் சித்தியும் ;

(ஆ) க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் ; அத்துடன்,

(இ) அங்கீகரிக்கப்பட்ட தாபனமொன்றில் தகவல்/வெளியீட்டுப் பிரிவில் ஆகக் குறைந்தது 5 வருடகால அனுபவம் ; அல்லது

2. (அ) க. பொ. த. (சாதாரணதரப்) பரீட்சையில், இரு தடவைக்கு மேற்படாமல், எண்கணிதம்/கணித பாடமுட்பட 6 பாடங்களில் சித்தி, இவற்றுள் சிங்களம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உட்பட 4 திறமைச் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட தாபனமொன்றில் தகவல்/வெளியீட்டுப் பிரிவில் 10 வருடகால அனுபவம், கமத்தொழில் பிரச்சினைகள் பற்றிய அறிவும், கமநலத் துறையில் அனுபவமும் மேலதிகத் தகைமைகளாகக் கணிக்கப்படும்.

**வயது.**—விண்ணப்ப முடிவுத் திகதியன்று 22 முதல் 35 வயது வரை, அரசாங்க/யாக்கச் சேவையில் உள்ளவர்களுக்கு, இவ் வயது மேலெல்லை அமைவுடையதன்று.

**வேதனம்.**—சகலமுமுட்பட மாதமொன்றிற்கு, ரூபா 570—9×20 + 6 × 25—ரூபா 900.

உயர்ந்த தகைமையும், அனுபவமுள்ள விண்ணப்பகாரர் மேற்குறித்த வேதன அளவுத் திட்டத்தில், அவர்தம் தகுதிக்கேற்ற வேதன நிலையில் நியமனமளிக்கப்பெறலாம்.

### நூலகப் பொறுப்பாளர் தரம் II

**தகுதியும் அனுபவமும் :**

1. (i) க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியும், அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தின் இடை நிலைப் பரீட்சையில் சித்தியும் ;

(ii) (அ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் நூலகத் துறையில் 5 வருட கால அனுபவமும், அல்லது

(ஆ) இலங்கை நூலகச் சங்கத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியும், அல்லது

(இ) கனிஷ்ட பல்கலைக் கழகத்தில் நூலகத் துறையில் டிப்ளோமா பட்டமும் ; அல்லது

2. (i) சி. பா. த. ப./க.பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தியும் ;

(ii) (அ) இலங்கை நூலகச் சங்கத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியும் ; அல்லது

(ஆ) கனிஷ்ட பல்கலைக் கழகத்தின் நூலகத் துறையில் டிப்ளோமா பட்டமும் ; அத்துடன்,

(iii) அங்கீகரிக்கப்பட்ட தாபனமொன்றில் நூலக உதவியாளராக 3 வருடகால அனுபவம்.

கமத்தொழில் துறையில் விதிமுறைப்பயிற்சி அனுபவமுள்ள விண்ணப்பகாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**வயது.**—விண்ணப்ப முடிவுத் திகதியன்று 22 முதல் 35 வயது வரை அரசாங்க/யாக்கச் சேவையில் உள்ளவர்களுக்கு இவ் வயது மேலெல்லை அமைவுடையதன்று.

**வேதனம்.**—சகலமுமுட்பட மாதமொன்றிற்கு. ரூபா 570—9 × 20 + 6 × 25—ரூபா 900.

உயர்ந்த தகைமையும், அனுபவமுள்ள விண்ணப்பகாரர் மேற்குறித்த வேதன அளவுத் திட்டத்தில், அவர்தம் தகுதிக்கேற்ற வேதன நிலையில் நியமனமளிக்கப்பெறலாம்.

இந்நிறுவகத்திலிருந்து பெறப்படாத விண்ணப்பப் படிவத்தில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். இப்பதவிக்கான சேவை நிபந்தனைகள் விண்ணப்பப் படிவத்தில் தரப்பட்டுள்ளன.

பணிப்பாளர்,
கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம்.

33, எலிபாங்க் வீதி,
கொழும்பு 5.

12-757—21.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 91

---

### இலங்கைச் சுங்கத் திணைக்களம்

### போக்குவரத்து உத்தியோகத்தர் பதவி

இலங்கைச் சுங்கத் திணைக்களத்தில் போக்குவரத்து உத்தியோகத்தர் பதவிக்காக விண்ணப்பங்கள் வரவழைக்கப்படுகின்றன. கீழே தரப்படும் வடிவில் அமைந்த விண்ணப்பங்கள் எனனை 1974.01.31 ஆந் தேதியன்றோ அதற்கு முன்னரோ வந்தடைதல் வேண்டும்.

2. **சம்பள அளவுத் திட்டம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத்திட்டம்—வருடம் 3,864 ரூபா—18—144—6,456 ரூபா.

3. **வேலைக்கமர்த்தும் நிபந்தனைகள்.**—பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்துக்குரிமையற்றதுமாகும். நியமனம், மூன்றாண்டுக் காலத்துக்குப் பரீட்சைநிலையிலிருக்கும். தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்தி தனது சம்பளத்தில் 6 சதவீதத்தை அரசாங்க சேவை சகாயநிதிக்கு உதவுதொகையாகக் கொடுக்குமாறு வேண்டப்படுவர். அரசாங்கம் சம்பளத்தில் 9 சதவீதத்தை உதவுதொகையாகக் கொடுக்கும். அரசாங்க சேவையில் ஏற்கெனவேயுள்ள நிரந்தரமான, ஓய்வூதியத்துக்குரிய உத்தியோகத்தர் தெரிந்தெடுக்கப்பட்டால், அவர் தொடர்ந்து அதே உரிமைகளைப் பெறுவர்.

4. **தேவையான தகைமைகள்.**—விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும்—

(அ) மிகச்சிறந்த நற்பண்புடையவரென்றும் உடனலமுடையவரென்றும் ;

(ஆ) 1974.01.31 ஆந் தேதியில் 25 வயதுக்குக் குறையாதவரென்றும் 40 வயதுக்கு மேற்படாதவரென்றும் (ஏற்கெனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இம்மேல் எல்லை பொருந்தாது) ;

(இ) (i) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் உடையவரென்றும் அல்லது கல்விப் பொதுச் சான்றிதழ் பரீட்சையில் (சாதாரணகட்டம்) சிங்களம்/தமிழ் மொழியிலும் எண்கணிதத்திலும்/தூயகணிதத்திலும் சித்தியுடன் இருமுறைக்கு மேற்படாமல் 6 பாடங்களில் சித்தியடைந்துள்ளானரென்றும் ;

(ii) (அ) அரசாங்க தொழினுட்பக் கழகமொன்றிலிருந்து மோட்டார் பொறியியலில் அல்லது அது தொடர்பான தொழினுட்பவியலில் டிப்புளோமா பட்டம் பெற்றவரென்றும் ; அல்லது

(ஆ) ஐக்கிய இராச்சிய யுனைற்றெட் மோட்டார் கைத்தொழில் கழக இணை உறுப்பினர் பட்டம் பெற்றவரென்றும் ; அல்லது

(இ) சம தகைமை பெற்றுள்ளவரென்றும் ; அத்துடன்

(ஈ) (i) அங்கீகரிக்கப்பட்ட மடுவம் ஒன்றில் அல்லது போக்குவரத்துத் தாபனமொன்றில் மூன்றாண்டு அனுபவமுடையவரென்றும் மோட்டார் வாகனத்திருத்தல்கள் பற்றி நல்லறிவுடையவரென்றும் ;

(ii) எல்லாவகையான மோட்டார் வாகனங்களையும் ஓட்டுவதற்கான தகுதிச்சான்றிதழ் உடையவரென்றும் ;

(iii) மோட்டார் போக்குவரத்துத் தாபனப் பணியாளரை மேற்பார்வை செய்யும் வல்லமையும் வாகனங்களைப் பேணும் வல்லமையுமுடையவரென்றும்

சான்று காட்டுதல் வேண்டும்.

5. விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளையும் அனுத்தல் வேண்டும்—

(1) பிறப்புப் பதிவு சான்றிதழ்
(2) உயர்கல்விச் சான்றிதழ்
(3) தொழினுட்பச் சான்றிதழ்கள்
(4) அண்மைக்காலப் பண்புச்சான்றிதழ்கள் மூன்று

இப்பிரதிகள் திருப்பிக் கொடுக்கப்படும்.

6. இவ்வர்த்தமானியின் I ஆம் பாகம் (II அ) பிரிவின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்கச் சேவைப் பதவிகளுக்கான நியமனங்கட்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளைப் பார்த்துக்கொள்க.

டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன,
சுங்கப் பிரதான் சேகரிப்பாளர்.

இலங்கைச் சுங்கம்,
கொழும்பு-1,
1973, திசம்பர் மாதம் 12 ஆந் தேதி.

### போக்குவரத்து உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பப் படிவம்

இலங்கைச் சுங்கம்

(மு. க.—விண்ணப்பம் அனுப்பப்படும் அஞ்சல் உறையின் இடப் பக்கத்து மேல் மூலையில் "போக்குவரத்து உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்" என எழுதி பதிவு அஞ்சலில் சுங்கச் சேகரிப்பாளர், இலங்கை சுங்கம், கொழும்பு 1 என்னும் முகவரிக்கு அதை அனுப்புதல் வேண்டும்).

1. முழுப் பெயர் :————.

2. முகவரி :————.

3. பிறந்த தேதியும் இடமும் :————.
(பிறப்புச் சான்றிதழ் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.).

4. நாட்டினம் :————.

5. மணமானவரா தனியாளா :————.

6. கல்வி தொழினுட்பத் தகைமைகள் :————.
(சான்றிதழ் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்).

7. பாடசாலையை விட்டதிலிருந்து இதுவரை பார்த்த தொழிலினதும் அத்துடன்/அல்லது பயிற்சியினதும் விவரங்கள் :————.

8. அரசாங்கத்திணைக்களம் அல்லது அரசாங்கக் கூட்டுத்தாபனம் எதிலும் முன்னர் வேலைபார்த்திருந்தால் அதிலிருந்து விலகியதற்காய காரணம் :————.

9. சட்டமன்றமொன்றில் குற்றவாளியெனத் தீர்ப்புப் பெற்றவராயின் குற்றத்தினதும் தண்டனையினதும் விவரங்கள் :————.

10. பண்புச்சான்றிதழ் கொடுத்த மூவரின் பெயரும் பதவிப் பெயரும் :————.

————,
கையொப்பம்.

தேதி :————.

12 749 –21.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 91

---

### கமத்தொழிற்றிணைக்களம்

தொழில் நுட்ப உத்தியோகத்தர் பதவிகள்

கமத்தொழிற்றிணைக்களத்தால் தொழில்நுட்ப பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—(i) பதவிகள் நிரந்தரமானவை. பொ. சே. சே. நிதிக்கு உதவுதொகை செலுத்தப்படவேண்டும். நியமனம், முதலில் 3 வருட காலத்திற்குப் பரீட்சார்த்தமாக விளங்கும்.

(ii) தெரிவு செய்யப்படுபவர்கள் இலங்கையின் எப்பகுதியிலும் கடமையாற்ற ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

3. **சம்பளமும் படிகளும்.**—கீழ்காணும் ஒன்று திரட்டிய வேதனம். இப் பதவிக்கு வழங்கப்படும். வருடாந்தம் ரூபா 6,024—4×144 உம் 8×180—ரூபா 8,040.

4. **வேண்டப்படும் தகைமைகள்.**—அபேட்சகர் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமையுடையவர் என்பதற்குத் திருத்திகரமான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடலுறுதியும் உடையவராய் இருத்தல் வேண்டும்.

(ஆ) (i) சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது கல்விப் பொதுத் தராதர (சாதாரணதர) பத்திரப் பரீட்சையில் சிங்கள/தமிழ்; எண்கணிதம்/கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட இருதடவைகளுக்கு மேற்படாது தோற்றி ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமமான அல்லது, உயர் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

(ii) (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விவசாய எந்திரவியல் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும் ; அல்லது

(ஆ) விவசாய எந்திரவியல் தேசிய டிப்புளோமா பட்டம் பெற்றிருத்தல் வேண்டும் ;

(இ) பொறிமுறை இயந்திரவியல் நிறுவனத்தின் கூட்டு அங்கத்துவப் பரீட்சையில் பகுதி I லும் II லும் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ; அல்லது

(ஈ) பொறிமுறை இயந்திரவியல் டிப்புளோமா பட்டம் (செயல்முறை, படிப்பித்தலில் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்) ;

(உ) ஐந்து வருட செயல்முறை அல்லது படிப்பித்தலிலும் உள்ள அனுபவத்தோடு இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியினால் வழங்கப்படும் தொழில்நுட்பப் பயிற்சிக்கான மாலை நேரப் பயிற்சித் தராதரப் பத்திரம் ; அல்லது

(ஊ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரித் திணைக்களத்தின் மாலை நேர இயந்திரவியல் பட்டத்துடன் 4 வருட (தொழில் பயிலும் பயிற்சி காலம் உட்பட) சாதனை பயிற்சி உம்/அல்லது படிப்பித்தல் அனுபவம் ; அல்லது

(எ) இலங்கை சர்வகலாசாலை கட்டுபெத்தை வளாகத்தின் கனிஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் (இயந்திரவியல்) பத்திரத்துடன் 4 வருட (தொழில் பயிலும் பயிற்சிக் காலம் உட்பட) சாதனை பயிற்சி உம்/அல்லது படிப்பித்தல் அனுபவம்,

(ஏ) கல்லோயா அபிவிருத்திச் சபையின் தொழில் பயிற்சித் தாபனத்தின் டிப்புளோமாவுடன் 4 வருட (தொழில் பயிலும் பயிற்சிகாலம் உட்பட) சாதனை பயிற்சி உம்/அல்லது படிப்பித்தல் அனுபவம் ; அல்லது

(iii) 1974 ஜனவரி 15 ம் திகதியன்று 35 வயதிற்கு மேற்படாதவராகவும் 21 வயதிற்குக் குறையாதவராகவும் இருத்தல் வேண்டும். (இவ் வயதுக் கட்டுப்பாடு ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு அமையாது).

5. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்துடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை இணைத்தனுப்புதல் வேண்டும்.—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு.—கு. சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) உயர் கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) சமீபத்தில் பெற்ற நற்சான்றுப் பத்திரங்கள் மூன்று.

(ஈ) தொழில் நுட்ப தகைமைகளையும் செயல்முறை அனுபவத்தையும் குறிப்பிடும் தராதரப் பத்திரம்.

(மு.கு.—தராதரப் பத்திரங்களின் மூலப் பிரதிகள் அனுப்பப்படக்கூடாது).

விண்ணப்பப் படிவங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்பட்டு 1974 ஜனவரி 15 ம் திகதி அல்லது அதற்கு முன்னதாக பதிவுத் தபாலில், பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்), கமத்தொழிற்றிணைக்களம், பேராதனை என்னும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். அரசாங்க சேவையில் உள்ளவர்களது விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களும் ஏனைய கடிதங்களும் பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்), கமத்தொழிற்றிணைக்களம் பேராதனை, என்னும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். எனக்கோ அல்லது திணைக்களத்தில் உள்ள எந்த ஊழியருக்கோ தனிப்பட்ட முறையில் அனுப்புதல் கூடாது.

9. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் முதலாம் பாகம் II அ பிரிவில் வெளியிடப்பட்டுள. அவற்றைப் பார்க்கவும்.

ஈ. அபயரத்ன,
**விவசாயப் பணிப்பாளர்.**

கமத்தொழிற்றிணைக்களம்,
பேராதனை.
1973 டிசம்பர் 10.

குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து தொழில் நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப் பெயர் :————.

(அ) முதற் பெயர் :————.

(ஆ) இதர பெயர்கள் :————.

2. நிரந்தர தபால் முகவரி :————.

3. 1974 ஜனவரி 15 ம் திகதியன்று சரியான வயதும் பிறந்த திகதியும் :————.

(பிறப்புச் சான்றுப் பத்திரத்தின் பிரதி ஒன்று இணைக்கப்படவேண்டும்)

4. தந்தையின் பெயரும் தொழிலும் :————.

5. பிறந்த இடம் :————.

(அ) விண்ணப்பதாரி :————.

(ஆ) விண்ணப்பதாரியின் தந்தை :————.

(இ) விண்ணப்பதாரியின் தந்தைவழிப் பாட்டன் :————

6. (அ) சாகியம் :————.

(ஆ) நீர் இலங்கைப் பிரசையா என்பதைத் தருக :————.

(i) வம்சாவழியாக :————.

(ii) பதிவு வழியாக :————.

7. உயர் கல்வித் தகைமைகள் :————.

(அ) சிங்களம் :—

(ஆ) தமிழ் :—

(இ) ஆங்கிலம் :—

8. வேறு விபரங்கள் :————.

இவ் விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையும், உண்மையானவையும் என இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன். இதில் தரப்பட்டுள்ள விபரங்கள் ஏதும் பொய்யானவையாக, அல்லது பிழையானவையாக இருப்பின், தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் இப் பிழை கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகைமையின்மையாளராக ஆக்கப்படுவதற்கும், நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு இன்றி வேலை நீக்கம் செய்யப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

12-721/1—21.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 91

---

கமத்தொழிற்றிணைக்களம்

போதனாசிரியர்கள் பதவிகள்

கமத்தொழிற்றிணைக்கள பண்ணை இயந்திர பராமரிப்பும் இயக்குதலுக்குமான போதனாசிரியர்கள் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :

(i) பதவிகள் நிரந்தரமானவை. பொ. சே. சே. நிதிக்கு உதவு தொகை செலுத்தப்பட வேண்டும். நியமனம், முதலில் 3 வருட காலத்துக்கு பரீட்சார்த்தமாக விளங்கும்.

(ii) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி இலங்கையின் எப் பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.

3. வேதனமும் படிகளும்.—பதவிக்கான ஒன்று திரட்டிய சம்பளம் பின்வருமாறு :

ரூபா 6,024—4×144 ம் 8×180—ரூபா 8,040.

4. தேவைப்படும் தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமையுடையவராவர் என்பதற்குத் திருப்திகரமான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) நல்லொழுக்கமுள்ளவராகவும், திடகாத்திரமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) (i) சிரேஷ்ட தராதரப் பத்திர பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது (ii) கல்விப் பொதுத் தராதரப் (சாதாரணம்) பத்திரப் பரீட்சையில் சிங்களம்/தமிழ், எண்கணிதம்/கணிதம் உட்பட இரண்டு தடவைகளுக்கு மேற்படாத முறையில் தோற்றி ஆறு பாடங்களில் சித்தி, அல்லது அதற்குச் சமமான, அல்லது உயர் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன்,

(ii) (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விவசாயப் பொறியியல் பட்டப் படிப்பு; அல்லது

(ஆ) விவசாயப் பொறியியல் தேசிய டிப்புளோமா; அல்லது,

(இ) இலங்கைப் பல்கலைக் கழகத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வேறு பல்கலைக்கழகப் பட்டதாரியாக இருப்பதுடன் பண்ணை இயந்திரவியல் துறையில் இரண்டு வருட அனுபவம்; அல்லது

(ஈ) பண்ணை இயந்திரங்களை இயக்குவதில் 5 வருட அனுபவத்துடன் குண்டசாலை கமத்தொழில் பாடசாலைப் பத்திரம் அல்லது இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியின் கனிஷ்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர் பத்திரம் அல்லது இலங்கை பல்கலைக்கழகம் கட்டுபெத்தை வளாகப் பத்திரம் அல்லது இவற்றை நிகர்த்த தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும். பண்ணை இயந்திரவியலில் இலங்கையிலோ அல்லது வெளியேயோ பெற்ற விசேட பயிற்சி மேலதிக தகைமையாகக் கணிக்கப்படும்.

(iii) 1974 ஜனவரி 15 ம் திகதி 21 வயதிற்குக் குறையாதவராகவும் 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கெனவே அரசாங்க சேவையில் நிரந்தர நியமனம் வகிப்போருக்கு இவ் வயதெல்லை அமையாது).

5. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வருவனவற்றின் பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம்.

(மு. கு.—சமயதிட்டைச் சான்றுகள். உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்படும் சான்றுகள் என்பன ஏற்கப்படமாட்டா)

(ஆ) உயர் கல்விச் சான்றிதழ்.

(இ) அண்மையில் பெற்ற நற்சான்றுப் பத்திரங்கள் மூன்று.

(ஈ) தொழில் நுட்பத் தகைமை, அனுபவம் தொடர்பான சான்றிதழ்.

(மு. கு.—இவற்றின் மூலப் பிரதிகளை இணைத்தனுப்புதல் கூடாது)

6. விண்ணப்பப் படிவங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்பட்டு 1974 ஜனவரி 15 ம் திகதியன்றோ அதற்கு முன்னதாகவோ கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில், பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்), கமத்தொழிற்றிணைக்களம், பேராதனை என்ற முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். அரசாங்கத் திணைக்களங்களில் சேவை புரிவோரது விண்ணப்பங்கள் அவர்களது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

7. விண்ணப்பம் அல்லது அது தொடர்பான வேறு தகவல்கள் யாவும் பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்), கமத்தொழிற்றிணைக்களம், பேராதனை என்னும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டுமேயன்றி தனிப்பட்ட முறையில் எனக்கோ, அன்றி திணைக்களத்தில் கடமையாற்றும் வேறு உத்தியோகத்தர்களுக்கோ அனுப்பப்படலாகாது.

8. இவ் அரசாங்க வர்த்தமானி பகுதி I பிரிவு II ல் வெளியிடப்பட்டுள்ள பொது சேவை நிபந்தனைகளை கவனத்தில் கொள்க.

ஈ. அபயரத்ன,
விவசாயப் பணிப்பாளர்.

கமத்தொழிற்றிணைக்களம்,
பேராதனை, 10 டிசெம்பர் 1973.

மாதிரி விண்ணப்பப் படிவம்

பண்ணை இயந்திரப் பராமரிப்பும் இயக்குதலுக்குமான போதனாசிரியர் பதவிகளுக்கான விண்ணப்பம்

1. முழுப் பெயர் :————.

(அ) சொந்தப் பெயர் :————.

(ஆ) வேறு பெயர்கள் :————.

2. நிரந்தர முகவரி :————.

3. 1974 ஜனவரி 15 ம் திகதியன்று வயதும் பிறந்த திகதியும் : ————.

(பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்)

4. தந்தையின் பெயரும் தொழிலும் :————.

5. பிறந்த இடம் :—

(அ) விண்ணப்பதாரி :————.

(ஆ) விண்ணப்பதாரியின் தந்தை :————.

(இ) விண்ணப்பதாரியின் தந்தைவழிப் பாட்டன் : ————.

6. (அ) சாதியம் :————.

(ஆ) நீர் இலங்கைப் பிரசையா ? :————.

(i) வம்சாவழியாக :————.

(ii) பதிவுவழியாக :————.

7. உயர் கல்வித் தகைமைகள் :—

(அ) சிங்களம் :————.

(ஆ) தமிழ் :————.

(இ) ஆங்கிலம் :————.

8. வேறு ஏதேனும் விபரங்கள் :————.

இவ் விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையும், உண்மையானவையுமென இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதில் தரப்பட்டுள்ள விபரங்கள் ஏதும் பொய்யானவையாக அல்லது பிழையானவையாகவிருப்பின், தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் இப் பிழை கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகைமையின்மையாளராக ஆக்கப்படுவதற்கும், நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடின்றி வேலை நீக்கஞ் செய்யப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

12–721/2—21.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 91

---

### இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

பிரதம கணக்காளர் பதவி

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் பிரதம கணக்காளர் பதவிக்குப் பின்வரும் தராதரங்கள் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :—

(அ) அங்கீகரிக்கப்பட்ட பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அல்லது அதற்கு ஒப்பான நிறுவனத்தின் அங்கத்தவர்கள்

அத்துடன்

(ஆ) 1973 நவம்பர் 30 ஆந் திகதியன்று 45 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

**இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் சேவையாற்றும் ஊழியர்களுக்கு வயது பற்றிய நிபந்தனை ஏற்புடையதன்று.**

**இப்பதவிக்கு ஏற்புடையதான சம்பள விகிதம் மாதம் ஒன்றுக்கு ரூ. 2,000—50—ரூ. 2,500 (எல்லாமுட்பட).**

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரரின் அனுபவம், மற்றும் தராதரங்களைக் கவனத்திற்கொண்டு, மேற்போந்த சம்பள விகிதத்தில் சம்பளம் நிர்ணயிக்கப்படலாம்.

விண்ணப்பங்கள் இக்கூட்டுத்தாபனத்தின் நிர்வாகப் பகுதியில் பெற்றுக்கொள்ளக் கூடிய விண்ணப்பப் படிவங்களில், 1973 டிசம்பர் 31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு, பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

அரச சேவையில் அல்லது அரச கூட்டுத்தாபனத்தில் உள்ள விண்ணப்பதாரர், தமது விண்ணப்பத்தை தமது திணைக்கள அல்லது கூட்டுத்தாபனத் தலைவர் மூலமாக இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படுமிடத்து, அவரை விடுக்க முடியுமா என்ற விவரத்தைத் திணைக்கள அல்லது கூட்டுத்தாபனத் தலைவரிடமிருந்து பெற்று, அனுப்பி வைக்க வேண்டும்.

பொது முகாமையாளர் (நிர்வாகம்).

367, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.

12–750—21.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 91

---

### கல்வி அமைச்சு

**இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி—புறவிரிவுரையாளர் பதவிகள்—கல்வி ஆண்டு 1974**

கொழும்பு 10, இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியிலுள்ள புற விரிவுரையாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. புற விரிவுரையாளர் தேவைப்படும் பயிற்சி நெறிகளும் பாடங்களும் மொழியும் பின்வருமாறு :—

**கணக்கியல் பிரிவு**

| பயிற்சி நெறி | மொழி | பகல்/பின்னேரம் | பாடங்கள் |
|---|---|---|---|
| கணக்கியல் தகுதித் தேர்வு I .. | .. சிங்களம் | .. பின்னேரம் .. | (1) வர்த்தகச் சட்டம் கொள்கைகள் |
| கணக்கியல் தகுதித் தேர்வு II | .. சிங்களம் | .. பின்னேரம் .. | (1) கணக்கியல் I, வரையறுத்த கம்பனிகள் உட்பட |
| | | | (2) கணக்கியல் II, பங்குடைமை உட்பட |
| | | | (3) கணக்காய்வு |
| | | | (4) கணிப்பியல், செலவினக் கணக்கியல் கொள்கைகள் |
| | | | (5) வர்த்தகச் சட்டம் |
| கணக்கியல் தகுதித் தேர்வு III | .. சிங்களம் | .. பின்னேரம் .. | (1) உயர்கணக்கீடு I, வரையறுத்த கம்பனிகள் உட்பட |
| | | | (2) உயர்கணக்கீடு II, பங்குடைமைகள் உட்பட |
| | | | (3) பங்குடைமை, வரையறுத்த கம்பனிகள் சட்டம் |
| | | | (4) நிர்வாகத்தோர் முதலானோர் பற்றிய சட்டம் |
| கணக்கியல் தகுதித் தேர்வு IV | .. சிங்களம் | .. பின்னேரம் .. | (1) முகாமைக் கணக்கீடு |
| | | | (2) கணக்காய்வு |
| | | | (3) வரி விதிப்பு |
| | | | (4) பொது நிதி அறிவு |
| கணக்கியல் தகுதித் தேர்வு I .. | .. ஆங்கிலம் | .. பின்னேரம் .. | (1) கணக்குப் பதிவியல் |
| | | | (2) பொருளியல் கொள்கைகள் |
| | | | (3) வர்த்தகச் சட்டக் கொள்கைகள் |
| | | | (4) பொது வர்த்தக அறிவு |
| கணக்கியல் தகுதித் தேர்வு II | .. ஆங்கிலம் | .. பின்னேரம் .. | (1) கணக்கியல் I, வரையறுத்த கம்பனிகள் உட்பட |
| | | | (2) கணக்கியல் II, பங்குடைமைகள் உட்பட |
| | | | (3) கணக்காய்வு |
| | | | (4) கணிப்பியலும், செலவினக் கணக்கியல் கொள்கைகளும் |
| | | | (5) பொது வர்த்தக அறிவு |
| | | | (6) வர்த்தகச் சட்டம் |

| பயிற்சி நெறி | மொழி | பகல்/பின்னேரம் | பாடங்கள் |
|---|---|---|---|
| கணக்கியல் தகுதித் தேர்வு III | ஆங்கிலம் | பின்னேரம் | (1) உயர்கணக்கீடு I, வரையறுத்த கம்பனிகள் உட்பட |
| | | | (2) உயர்கணக்கீடு II, பங்குடைமைகள் உட்பட |
| | | | (3) பங்குடைமைகள், வரையறுத்த கம்பனிகள் சட்டம் |
| | | | (4) நிர்வாகத்தர் முதலானோர் பற்றிய சட்டம் |
| கணக்கியல் தகுதித் தேர்வு IV | ஆங்கிலம் | பின்னேரம் | (1) முகாமைக் கணக்கீடு |
| | | | (2) கணக்கியல் |
| | | | (3) வரி விதிப்பு |
| | | | (4) பொது நிதி அறிவு |
| கணக்கியல் தகுதித் தேர்வு I | தமிழ் | பின்னேரம் | (1) கணக்குப் பதிவியலும் கணக்கும் |
| | | | (2) பொருளியல் கொள்கைகள் |
| | | | (3) வர்த்தகச் சட்டக் கொள்கைகள் |
| கணக்கியல் தகுதித் தேர்வு II | தமிழ் | பின்னேரம் | (1) கணக்கீடு I, வரையறுத்த கம்பனிகள் உட்பட |
| | | | (2) கணக்கீடு II—பங்குடைமைகள் உட்பட |
| | | | (3) கணக்காய்வு |
| | | | (4) கணிப்பியல், செலவினக் கணக்கியல் கொள்கைகள் |
| | | | (5) பொது வர்த்தக அறிவு |
| | | | (6) வர்த்தகச் சட்டம் |
| செலவினக் கணக்கியல் I | ஆங்கிலம் | பகல் | (1) கணக்குப் பதிவியலும், கணக்கும் |
| | | | (2) பொருளியல் |
| | | | (3) கைத்தொழில் நிர்வாகம் |
| | | | (4) கணிப்பியல் |
| | | | (5) வாணிக கணிதம் |
| செலவினக் கணக்கியல் I | ஆங்கிலம் | பின்னேரம் | (1) கணக்குப் பதிவியலும் கணக்கும் |
| | | | (2) பொருளியல் |
| | | | (3) கைத்தொழில் நிர்வாகம் |
| | | | (4) கணிப்பியல் |
| | | | (5) வாணிக கணிதம் |
| செலவினக் கணக்கியல் II | ஆங்கிலம் | பின்னேரம் | (1) செலவினக் கணக்கியல் I |
| | | | (2) செலவினக் கணக்கியல் II |
| | | | (3) செலவினக் கணக்கியல் III |
| செயலாண்மைத்துறை I | ஆங்கிலம் | பகல் | (1) கணக்கீடு |
| | | | (2) பொருளியல் கொள்கைகள் |
| | | | (3) ஆங்கிலேயச் சட்டக் கொள்கைகள் |
| | | | (4) ஆங்கிலம் |
| செயலாண்மைத்துறை I | ஆங்கிலம் | பின்னேரம் | (1) கணக்கீடு |
| | | | (2) பொருளியல் கொள்கைகள் |
| | | | (3) ஆங்கிலேயச் சட்டக் கொள்கைகள் |
| | | | (4) ஆங்கிலம் |
| செயலாண்மைத்துறை II | ஆங்கிலம் | பின்னேரம் | (1) பொருளியல் கொள்கைகளும், சிக்கல்களும் |
| | | | (2) செயலாண்மை நிர்வாகப் பயிற்சி |
| | | | (3) ஆங்கிலேய கம்பனிச் சட்டம் |
| வங்கித் தொழில் I | ஆங்கிலம் | பின்னேரம் | (1) கணக்குப் பதிவியலும், கணக்கும் |
| | | | (2) பொருளியல் தத்துவங்கள் |
| | | | (3) ஆங்கிலேயச் சட்டக் கொள்கைகள் |
| | | | (4) ஆங்கிலம் |
| | | | (5) பொருளியற் புவியியல் |
| போக்குவரத்து I | ஆங்கிலம் | பின்னேரம் | (1) போக்குவரத்து |
| | | | (2) தொடர்பு மூலகங்களும் பயிற்சியும் |
| | | | (3) கணிப்பியல் |
| ஹோட்டல் முகாமை | ஆங்கிலம் | பகல் | (1) ஹோட்டல் முகாமை |
| | | | (2) உணவளித்தல் |
| | | | (3) ஜப்பானிய பாஷை |
| | | | (4) பிரான்சிய பாஷை |
| | | | (5) ஜேர்மன் பாஷை |
| உல்லாசப் பிரயாணம் | ஆங்கிலம் | பகல் | (1) உல்லாசப் பிரயாணம் |
| | | | (2) ஜப்பானிய பாஷை |
| | | | (3) பிரான்சிய பாஷை |
| | | | (4) ஜேர்மன் பாஷை |
| | | | (5) இலங்கையைப் பற்றிய அடிப்படை அறிவு |

### ஆங்கில வர்த்தகப் பகுதி

| பயிற்சி நெறி | மொழி | பகல்/பின்னேரம் | பாடங்கள் |
|---|---|---|---|
| உயர்தர தேசிய வர்த்தகத் தகுதித் தேர்வு I | ஆங்கிலம் | பகல் | (1) இலங்கையின் அரசியல், சமுதாய அமைப்பு |
| | | | (2) வாணிக கணிதம் |
| உயர்தர தேசிய வர்த்தகத் தகுதித் தேர்வு II | ஆங்கிலம் | பகல் | (1) பிரயோகப் பொருளியல் |
| உயர்தர தேசிய வர்த்தகத் தகுதித் தேர்வு III | ஆங்கிலம் | பகல் | (1) பிரயோகப் பொருளியல் |
| | | | (2) அரசியற் தத்துவங்கள் |
| | | | (3) கணக்கியல் |
| உயர்தர தேசிய வர்த்தகத் தகுதித் தேர்வு IV | ஆங்கிலம் | பகல் | (1) வரிவிதிப்பு |
| | | | (2) பொது நிதியியல் |
| | | | (3) கணக்கியல் |
| உயர்தர தேசிய மதிப்பீட்டுத் தகுதித் தேர்வு I | ஆங்கிலம் | பகல் | (1) நில அளவையும் சரிமட்டமும் (தத்துவம்) |
| | | | (2) நில அளவையும் சரிமட்டமும் (பயிற்சி) |

| பயிற்சி நெறி | மொழி | பகல்/பின்னேரம் | பாடங்கள் |
|---|---|---|---|
| உயர்தர தேசிய மதிப்பீட்டுத் தகுதித் தேர்வு II .. | ஆங்கிலம் | .. பகல் | .. (1) நில அளவையும் சரிமட்டமும் (தத்துவம்)<br>(2) நில அளவையும் சரிமட்டமும் (பயிற்சி)<br>(3) மதிப்பீடு |
| உயர்தர தேசிய மதிப்பீட்டுத் தகுதித் தேர்வு III .. | ஆங்கிலம் | .. பின்னேரம் | .. (1) மதிப்பீடு<br>(2) விவசாயம்<br>(3) உள்ளூராட்சி நிதியியல்<br>(4) நகர, கிராம திட்ட அமைப்பு |
| உயர்தர தேசிய மதிப்பீட்டுத் தகுதித் தேர்வு IV .. | ஆங்கிலம் | .. பின்னேரம் | .. (1) மதிப்பீடு<br>(2) விவசாயம்<br>(3) உள்ளூராட்சி நிதியியல் |
| வணிகப் பயிற்சிக்கான தேசிய தராதரப் பத்திரம் .. | ஆங்கிலம் | .. பின்னேரம் | .. (1) கணக்கீடு<br>(2) வர்த்தக எண்கணிதம்<br>(3) சமுதாயப் படிப்பு<br>(4) பொது வர்த்தக அறிவு, பொருளியல் உட்பட<br>(5) செலவினக் கணக்கியல்<br>(6) விற்பனையாண்மையும் விற்பனை முகாமையும்<br>(7) ஆங்கிலப் பாஷை |
| வணிகப் பயிற்சிக்கான தேசிய தராதரப் பத்திரம் .. | ஆங்கிலம் | .. பகல் | .. (1) சுருக்கெழுத்து<br>(2) சமுதாயப் படிப்பு<br>(3) செலவினக் கணக்கியல்<br>(4) விற்பனையாண்மையும் விற்பனை முகாமையும்<br>(5) பொது வர்த்தக அறிவு பொருளியல் உட்பட |
| உயர் வர்த்தக தராதரப் பத்திரம் .. | ஆங்கிலம் | .. பின்னேரம் | .. (1) வர்த்தகமும் நிதியும்<br>(2) வர்த்தக எண்கணிதம் |
| உயர் சுருக்கெழுத்தியல் .. .. | ஆங்கிலம் | .. பின்னேரம் | .. (1) சுருக்கெழுத்து |
| விற்பனையாண்மையும் விற்பனை முகாமையும் .. | ஆங்கிலம் | .. பின்னேரம் | .. (1) விற்பனையாண்மையும், விற்பனை முகாமையும் |
| **வர்த்தகத் தகுதித் தேர்வு—சிங்களப் பிரிவு** | | | |
| உயர்தர தேசிய வர்த்தக தகுதித் தேர்வு I .. | சிங்களம் | .. பகல் | .. (1) வாணிககணிதம் |
| உயர்தர தேசிய வர்த்தக தகுதித் தேர்வு II .. | சிங்களம் | .. பகல் | .. (1) வாணிக கணிதம் |
| உயர்தர தேசிய வர்த்தக தகுதித் தேர்வு III .. | சிங்களம் | .. பகல் | .. (1) கணக்கியல்<br>(2) செலவினக் கணக்கு<br>(3) வரிவிதிப்பு |
| உயர்தர தேசிய மதிப்பீட்டுத் தகுதித் தேர்வு I .. | சிங்களம் | .. பகல் | .. (1) நில அளவையும் சரிமட்டமும் |
| உயர்தர தேசிய மதிப்பீட்டுத் தகுதித் தேர்வு II .. | சிங்களம் | .. பகல் | .. (1) நில அளவையும் சரிமட்டமும்<br>(2) மதிப்பீடு |
| உயர்தர தேசிய மதிப்பீட்டுத் தகுதித் தேர்வு III .. | சிங்களம் | .. பகல் | .. (1) மதிப்பீடு<br>(2) காணிகளைப் பற்றிய சட்டம்<br>(3) நகர திட்ட அமைப்பு<br>(4) விவசாயம்<br>(5) உள்ளூராட்சி சட்டமும், நிதியும் |
| உயர்தர தேசிய மதிப்பீட்டுத் தகுதித் தேர்வு IV .. | சிங்களம் | .. பின்னேரம் | .. (1) மதிப்பீடு<br>(2) விவசாயம்<br>(3) உள்ளூராட்சிச் சட்டம்<br>(4) உள்ளூராட்சி நிதி |
| **சிங்கள வர்த்தகம்—பகல் தராதரப் பிரிவு** | | | |
| வர்த்தகப் பயிற்சி தராதரப் பத்திரம் .. | சிங்களம் | .. பின்னேரம் | .. (1) சுருக்கெழுத்து |
| **சிங்கள வர்த்தகம்—பின்னேரத் தராதரப் பிரிவு** | | | |
| வர்த்தகப் பயிற்சி தராதரப் பத்திரம் .. | சிங்களம் | .. பின்னேம் | .. (1) சிங்கள பாஷை<br>(2) வர்த்தக எண்கணிதம்<br>(3) சமுதாயப் படிப்பு<br>(4) செலவினக் கணக்கு முறைகள்<br>(5) சட்டத்தின் பொதுக் கொள்கைகள்<br>(6) விற்பனையாண்மையும் விற்பனை முகாமையும்<br>(7) சுருக்கெழுத்து |
| சுருக்கெழுத்திற் தராதரப் பத்திரம் .. | சிங்களம் | .. பின்னேரம் | .. (1) சுருக்கெழுத்து |
| உயர் சுருக்கெழுத்தியல் .. .. | சிங்களம் | .. பின்னேரம் | .. (1) சுருக்கெழுத்து |
| விற்பனையாண்மையும் விற்பனை முகாமையும் .. | சிங்களம் | .. பின்னேரம் | .. (1) விற்பனையாண்மையும் விற்பனை முகாமையும் |
| **பட்டறைப் பிரிவு** | | | |
| இயந்திரம் I .. .. .. | சிங்களம் | .. பின்னேரம் | .. (1) செய்முறை<br>(2) தத்துவம்<br>(3) தொழில்நுட்ப வரைவு |
| இயந்திரம் II .. .. | சிங்களம் | .. பின்னேரம் | .. (1) செய்முறை<br>(2) தத்துவம்<br>(3) தொழில் நுட்ப வரைவு |
| இயந்திரம் III .. .. | சிங்களம் | .. பின்னேரம் | .. (1) செய்முறை<br>(2) தத்துவம்<br>(3) தொழில்நுட்ப வரைவு |

| பயிற்சி நெறி | மொழி | பகல்/பின்னேரம் | பாடங்கள் |
|---|---|---|---|
| பொருத்தல் I | சிங்களம் | பின்னேரம் | (1) செய்முறை<br>(2) தத்துவமும் கணிப்பும்<br>(3) தொழில்நுட்ப வரைவு |
| பொருத்தல் II | சிங்களம் | பின்னேரம் | (1) செய்முறை<br>(2) தத்துவமும் கணிப்பும்<br>(3) தொழில்நுட்ப வரைவு |
| பொருத்தல் III | சிங்களம் | பின்னேரம் | (1) செய்முறை<br>(2) தத்துவமும் கணிப்பும்<br>(3) தொழில்நுட்ப வரைவு |
| பற்றவைப்பு | சிங்களம் | பின்னேரம் | (1) செய்முறை<br>(2) தத்துவமும் கணிப்பும்<br>(3) தொழில்நுட்ப வரைவு |
| இயந்திரம் I | சிங்களம் | பகல் | (1) தத்துவமும் கணிப்பும்<br>(2) செய்முறை |
| பொருத்தல் I | சிங்களம் | பகல் | (1) செய்முறை |
| **மரவேலைப் பிரிவு** | | | |
| தச்சு வரைவு I | சிங்களம் | பின்னேரம் | (1) தொழில்நுட்ப வரைவு |
| தச்சு வரைவு II | சிங்களம் | பின்னேரம் | (1) தச்சு வரைவு |
| கோணம் செய்தல் | சிங்களம் | பின்னேரம் | (1) செய்முறை<br>(2) தத்துவம்<br>(3) தொழில்நுட்ப வரைவு |
| உருவ அமைப்புத் தொழிலும் பலகணியடைப்பும் | சிங்களம் | பின்னேரம் | (1) செய்முறை<br>(2) தொழில்நுட்ப வரைவு |
| இசைக்கருவிகள் செய்தல் | சிங்களம் | பகுதிநேரம் | (1) செய்முறை |
| **மோட்டார் இயந்திர அமைப்புப் பிரிவு** | | | |
| மோட்டார் இயந்திர அமைப்பு I | சிங்களம் | பின்னேரம் | (1) தொழில்நுட்ப வரைவு |
| மோட்டார் இயந்திர அமைப்பு II | சிங்களம் | பகல் | (1) மோட்டார் திருத்தமும் தத்துவம்<br>(2) கணிப்பு<br>(3) மின்பொறிகள் |
| **மின் பிரிவு** | | | |
| வானொலி மின்னணுவியல் I | சிங்களம் | பகல் | (1) செய்முறை |
| வானொலி மின்னணுவியல் II | சிங்களம் | பகல் | (1) செய்முறை |
| வானொலி பேணற் சேவை | சிங்களம் | பின்னேரம் | (1) தத்துவம்<br>(2) செய்முறை |
| மின் கம்பி அமைத்தல் | சிங்களம் | பின்னேரம் | (1) தத்துவம்<br>(2) செய்முறை |
| **அச்சுத் தொழிற் பிரிவு** | | | |
| எழுத்துக்கோர்த்தல் | சிங்களம் | பின்னேரம் | (1) தத்துவமும் கணிப்பும்<br>(2) செய்முறை |
| அச்சிடல் | சிங்களம் | பின்னேரம் | (1) தத்துவமும் கணிப்பும்<br>(2) செய்முறை |
| புத்தகம் கட்டல் | சிங்களம் | பின்னேரம் | (1) தத்துவமும் கணிப்பும்<br>(2) செய்முறை |
| **கட்டுமானவேலைப் பிரிவு** | | | |
| கட்டட வேலை I | சிங்களம் | பகுதிநேரம் | (1) தத்துவம்<br>(2) திட்ட வரைவு<br>(3) கணிப்பு |
| கட்டட வேலை II | சிங்களம் | பகுதிநேரம் | (1) தத்துவம்<br>(2) திட்ட வரைவு<br>(3) கணிப்பு |
| தூக்குநூல் தொழில் | சிங்களம் | பின்னேரம் | (1) தத்துவம்<br>(2) செய்முறை |
| கல்வேலை வரைதல் | சிங்களம் | பின்னேரம் | (1) தத்துவம்<br>(2) செய்முறை |

**நேரம்.**—பகல் நேரப் பயிற்சி நெறிகள் வார நாட்களில் மு. ப. 8.00 மணி தொடக்கம் பி. ப. 5.00 மணி வரையும், பின்னேரப் பயிற்சி நெறிகள் வார நாட்களில் பி. ப. 5.00 மணி தொடக்கம் பி. ப. 7.15 வரையும், சனிக்கிழமைகளில் பி. ப. 2.00 மணி தொடக்கம் பி. ப. 4.00 மணி வரையும் நடைபெறும்.

**கட்டணம்.**—விரிவுரையாளருக்கான கட்டண விகிதங்கள் ஒரு மணித்தியால விரிவுரைக்கு ரூபா 2.50 தொடக்கம் ரூபா 21.00 வரை மாறுபடும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களுக்குக் கொடுபடக்கூடிய விகிதங்கள் அவர்களின் கல்வித் தகைமைகளுக்கும் உயர் தொழிற்றகைமைகளுக்கும் திறைசேரியால் விதிக்கப்பட்டுள்ள பிரகாரம், பயிற்சி நெறியின் மட்டத்துக்கும் அமையும். படிப்பித்தல் அனுபவம் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**நியமன விதிகள்.**—நியமனம் 1974 சனவரி தொடக்கம் 1974 டிசம்பர் முடியவுள்ள ஒரு கல்வி ஆண்டுக்கானதாகும். எனினும், காரணங்கள் ஒன்றும் காட்டாது கல்வி ஆண்டின்போது எந்நேரத்திலேனும் அவர்களின் சேவை நிறுத்தப்படலாம்.

கல்வி ஆண்டின் படிப்பிக்க வேண்டியதான அவர்களுக்குக் கொடுபடும் பாடத்திட்டங்களை அவர்கள் எங்ஙனம் படிப்பிப்பார்களென விளக்கும் வேலைத் திட்டங்களைப் பருவம் ஆரம்பிக்குமுன் புற விரிவுரையாளர்கள் சமர்ப்பிக்க வேண்டும். கல்வி ஆண்டின்போது அவர்கள் நிகழ்த்தும் விரிவுரைகள் அங்கீகரிக்கப்பட்ட வேலைத் திட்டங்களுக்கமைய வேண்டும்.

பருவப் பரீட்சைகளில் வெளியே இருந்து பரீட்சகர்கள் அமர்த்தப்பட்டாலன்றி, தங்களுடைய வகுப்புகளிலுள்ள மாணவர்களைப் பருவ இடைக்காலப் பருவப் பரீட்சைகளில் அவர்கள் மேலதிக வேதனமின்றி பரீட்சிக்க வேண்டும்.

**விண்ணப்பங்கள் ஏற்கும் தேதி.**—விண்ணப்பங்கள் கீழ்க்காணும் படிவ முறையில் அதிபர், இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி, கொழும்பு 10 என்னும் விலாசத்துக்கு 31.12.1973 அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். கீழ்க்காணும் படிவத்துக்கு இணங்கி அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு பிரத்தியேக விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும்.

கொழும்புப் பிராந்திய அலுவலகம்,
கொழும்பு 7,
1973 ம் ஆண்டு மார்கழி மீ 05 ந் உ.

எ. ஜே. எஸ். குணவர்த்தன,
கல்வி அதிபதி,
கொழும்புப் பிராந்தியம்.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

1. விண்ணப்பிக்கும் பிரிவு :————.
2. முழுப் பெயர் :————.
3. வயது :————.
4. சொந்த விலாசம் :————.
(தொலைபேசி எண் இருப்பின் குறிப்பிடுக) :————.
5. அலுவலக விலாசம் :————.
(தொலைபேசி எண் இருப்பின் குறிப்பிடுக) :————.
6. தொழில் அல்லது உத்தியோகம் :————.
7. வேறு உத்தியோகம் யாதேனும் இருப்பின் :————.
8. உயர்தொழில் தகைமைகள் (தேதிகளைக் கொடுக்க) :————.
9. படிப்பித்தல் அனுபவம் :
(அ) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் :————.
(ஆ) வேறும் நிறுவனங்களில் :————.
10. செயன்முறை அனுபவம் யாதேனும் இருப்பின் :————.
11. விண்ணப்பிக்கும் பயிற்சி நெறிகளும் பாடங்களும் :—

| பயிற்சி நெறி | பாடங்கள் | மொழி |
|---|---|---|
| ................................................ | ................................................ | ................................................ |
| ................................................ | ................................................ | ................................................ |

12. வகுப்புகளை நடாத்த முடியுமான மொழி (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) :————.
13. ஒரு வாரத்தில் நடாத்தக்கூடிய ஆகக்கூடிய வகுப்புக்கள் :————.
14. நீர் ஓர் அரசாங்க ஊழியரா ? :————.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

தேதி :————.

12-830—21.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 91

---

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

### தமிழ் ஆசிரியர் பரீட்சை—பகுதி " ஆ " 1973

மேற்படி பரீட்சை கீழ்க்குறிக்கப்படும் பரீட்சை நிலையங்களில் 1974 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ஆந் தேதி ஆரம்பமாகும்.

**பரீட்சை நிலையங்கள்**

அம்பலாங்கொடை, அனுராதபுரம், பதுளை, பண்டாரவளை, மட்டக்களப்பு, கொழும்பு, தம்புல்லை, திக்வல்லை, எகலியகொடை, கலிகமுவை, காலி, கோமகம, ஹொரணை, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, குளியாப்பிட்டி, குருநாகல், மாத்தளை, மாத்தறை, மொனருகலை, நாவலப்பிட்டி, நிக்கவரட்டியா, நீர்கொழும்பு, நுவரெலியா, பருத்தித்துறை, பொலன்னறுவை, இரத்தினபுரி, திருகோணமலை, வவுனியா, வியாங்கொடை.

2. தமிழ் ஆசிரியர் பரீட்சை பகுதி " அ " வில் தற்பொழுது சித்தியடைந்திருக்கும் அல்லது விலக்களிக்கப்பட்டிருக்கும் ஆசிரியர்கள் மட்டும் இப்பரீட்சைக்குத் தோற்றலாம். **எனினும், 1968 ஆம் ஆண்டின் வேதன முரண்பாட்டு ஆணைக்குழுவின் விதப்புரைகளின் கீழ் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையிற் சித்தியடைய வேண்டப்பட்ட ஆசிரியர்கள் பகுதி " அ " பரீட்சையில் சித்தியடையாது அல்லது விலக்களிக்கப் பெறுதிருந்தாலும் இப் பரீட்சைக்குத் தோற்றலாம்.**

3. **விண்ணப்பங்கள்**

(1) வர்த்தமானியிற் கொடுக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவம் போன்று பரீட்சார்த்திகள் படிவங்களைத் தாமே தயாரித்துக் கொள்ளல் வேண்டும். 8″ × 13″ அளவினதான கடதாசியில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவம் எழுதப்படலாம் (தட்டெழுத்திலிருப்பின் நன்று).

(2) முறையாக நிரப்பப்பட்ட விண்ணப் படிவம் 1974 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் பரீட்சை ஆணையாளர், பரீட்சைத் திணைக்களம், மலே வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல்வேண்டும். பரீட்சை ஆணையாளரின் அல்லது அங்கு கடமையாற்றும் வேறு ஊழியர்களினது தனிப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் அனுப்பும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

**(3) வினைத்திறமையான தடைப் பரீட்சையிற் சித்தியடையும் நோக்கத்திற்காக இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை பிரதேச கல்விப் பணிப்பாளர் / பிரதம கல்வி அதிகாரி மூலம் அனுப்புதல் வேண்டும். பிரதேசக் கல்விப் பணிப்பாளர்/பிரதம கல்வி அதிகாரி, விண்ணப்பங்களை முடிவுத் தேதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளருக்கு அனுப்புதற்கேதுவாக, இப்பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களை பிரதேச கல்விப் பணிப்பாளருக்கு/பிரதம கல்வி அதிகாரிக்கு நேரகாலத்துடன் தமது விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும். முடிவுத் தேதிக்கு முன்னர் விண்ணப்பங்களைப் பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பும் பொறுப்பு, பிரதேசக் கல்விப் பணிப்பாளரினது/பிரதம கல்வி அதிகாரியினது ஆகும்.**

(4) மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் முடிவுத் தேதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டா.

கவனிக்க

**1973.08.24 ஆந் தேதிய 74 ஆம் இலக்க இலங்கைக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட எனது அறிவித்தலின்படி 1973.10.13 ஆந் திகதி நடாத்தப்படுமெனப் பட்டோலைப்படுத்தப்பட்ட பரீட்சைக்கு ஏலவே விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.**

4. 1969 ஆம் ஆண்டிலும் அதற்கும் பின்னரும் நடைமுறைக்கு வரும் தமிழ் ஆசிரியர் பரீட்சைக்கான திருத்தப்பட்ட பிரமாணங்களையும் பாடத்திட்டங்களையும் வாசித்து அவற்றைப்பற்றிய பூரண அறிவைப் பெறுதல் வேண்டுமென பரீட்சார்த்திகளுக்கு ஆலோசனை கூறப்படுகின்றது. இப்பிரமாணங்களையும் பாடத்திட்டங்களையும் நேரிற் பெற விரும்புவோர் அரசாங்க வெளியீடு அலுவலகத்திலும் அல்லது கல்வி அமைச்சிலுள்ள தகவல் நிலையத்திலிருந்து 40 சதத்திற்குப் பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் பெறவிரும்புவோர் தமது கடிதத்துடன் ரூபா 1.25 க்கு உரிய காசோலையேனும் அல்லது காசுக் கட்டளையேனும் பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பினால் அவர்களுக்கு இது அனுப்பி வைக்கப்படும்.

5. மேற்கூறப்பட்ட பிரமாணங்களைத் தவிர்த்து பின்வரும் நிபந்தனைகளும் இப்பரீட்சைக்குப் பொருந்தும் :—

(1) தமிழ் ஆசிரியர் பரீட்சையின் பகுதி " ஆ " மாத்திரம் இப்பொழுது நடாத்தப்படுகின்றது.

(2) பகுதி " அ " விலிருந்து விலக்களித்தல்பற்றிய பிரமாணங்களின் 1 தொடக்கம் 10 வரையான பந்திகளில் வழங்கப்பட்ட சலுகைகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளன. பந்தி 5 இன் கீழல்லாத விலக்களிக்கப்படுதற்கான வேண்டுகோள்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

(3) இப்பரீட்சையின் பெறுபேறுகள் இலங்கைக் குடியரசு வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படும்.

(4) சித்தியடையும் பரீட்சார்த்திகளெவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படமாட்டா.

(5) ஆசிரியர் கடமையாற்றும் பாடசாலையின் அதிபரினால் பரீட்சார்த்தியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

இப் பரீட்சையின் கட்டணம் ரூபா 20/-.

போகொட பிரேமரத்ன,
பரீட்சை ஆணையாளர்.

பரீட்சைத் திணைக்களம்,
மலே வீதி, கொழும்பு 2,
1973 ம் ஆண்டு டிசெம்பர் மீ 10 ந் உ.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

**தமிழ் ஆசிரியர் பரீட்சை—பகுதி " ஆ " 1973**

சுட்டிலக்கம் :
(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)
ஆண்/பெண் :

1. பரீட்சார்த்தியின் பெயர் :——————.
மையான கையொப்பம் :——————.

2. பரீட்சார்த்தியின் முழுப்பெயர் :——————.
(வண./திரு./திருமதி/செல்வி)
(நியமனக் கடிதத்தில் வழங்கப்பட்ட பெயரினை அன்றேல் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் உள்ள பெயரினை எழுதுதல் வேண்டும்.)

3. பிரவேசச் சீட்டும் பிற சாதனங்களும் அனுப்பவேண்டிய முகவரி: ——————.

4. பரீட்சை நிலையம் (மிகக் கூடிய விருப்பத்திற்குரிய நிலையங்களாக நிரைப்படுத்தி மூன்று நிலையங்களின் பெயரைத் தருக).
(அறிவித்தலின் முதலாம் பந்தியிற் தரப்பட்ட நிலையங்களிலிருந்தே இவை தெரியப்படல் வேண்டும்.)

1.
2.
3.

5. முத்திரைகளை இங்கே ஒட்டுக.
(பரீட்சைக் கட்டணம்
ரூபா 20.00)

| |
|---|
| முத்திரை ஒட்டுவதற்கான கூடு. முத்திரைகளில் பரீட்சார்த்தியின் கையொப்பமும் திகதியும் இடப்பட்டு பயனற்றதாக்கப்படல் வேண்டும். முத்திரைகள் ஒன்றையொன்று மருவாத வகையில் ஒட்டப்படல் வேண்டும். |

6. 1973 சனவரி 01 ஆந் திகதியன்று வயது :——————.

7. தற்போதைய நியமனம்பற்றிய விபரம் :—.

(அ) பாடசாலையின் பெயரும் முகவரியும் :——————
அரசாங்க உதவிபெறும் அங்கீகரிக்கப்பட்ட உதவிபெறாத தனியார் பாடசாலை அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரிவெனவா ?

(ஆ) அந்தஸ்து (நிரந்தர தகுதிகாண்) :——————.

(இ) தற்போதைய நியமனத்தின் தன்மை :——————.

(ஈ) பரீட்சார்த்தியினால் கற்பிக்கப்படும் பாடங்கள் :——————.

(உ) பரீட்சார்த்தி எம்மொழிமூலம் கற்பிக்கின்றார் :——————.

(ஊ) வாரமொன்றுக்கு உண்மையாக கற்பித்தலுக்கு ஒதுக்கப்பட்ட மணித்தியாலங்கள் :——————.

(எ) மாதாந்த வேதனம் (திரட்டியது) :——————.
தற்போதைய வேதனமும் வேதனத் திட்டமும் :——————.

(ஏ) வேதனத் திட்டத்தில் இப்பரீட்சையின் பகுதி " ஆ " வையும் " இ " யையும் சித்தியடைவதன் மூலம் ஒருவினைத்திறமைகாண் தடைப் பரீட்சையிற் சித்தியடையுமாறு வேண்டப்பட்டுள்ளதா ?

அப்படியாயின் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை சித்தியடைய வேண்டியதிற்கான வேதன நிலையைத் தருக.

8. ஆசிரியரின் பதிவிலக்கத்தை அல்லது நியமனக் கடிதத்தின் இலக்கத்தை அல்லது கல்வியதிபதி அல்லது பிரதேசக் கல்வி அதிகாரியிடமிருந்து நியமன அங்கீகாரம்பற்றிய உறுதிக் கடிதத்தின் விபரத்தை இங்கே குறிப்பிடுக :—

9. இப்பகுதி பாடசாலை முகாமையாளரால் அல்லது தலைமை ஆசிரியரால் நிரப்பப்படல் வேண்டும்.

இப் பரீட்சார்த்தி சம்பந்தப்பட்ட சகல ஆவணங்களையும் பரிசீலனை செய்தேன் எனவும், அவற்றின்படி இவ்விண்ணப்பத்தின் 2 ம், 6 ம் 7 ம், 8 ம் கூடுகளிலுள்ள விபரங்கள் சரியானவை எனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

கையொப்பம் :——————.
திகதி :——————.

பெயர் :——————.

முகவரி :——————.

10. பரீட்சார்த்தியின் உறுதியுரை.—

இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும் இதன்முன் எதற்கும் பயன்படுத்தப்படாதவையென்றும் நான் உறுதி கூறுகின்றேன். இப்பரீட்சை சம்பந்தமாகப் பரீட்சை ஆணையாளரால் பிரசுரிக்கப்படும் பிரமாணங்களுக்கும் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் கீழ்ப்படிந்து ஒழுக வேண்டிய விதிகளுக்கும் ஒரே முகமாக இணங்கி நடப்பதற்கு உடன்படுகின்றேன்.

——————,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :——————.

11. பரீட்சார்த்தியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்
(பரீட்சார்த்திகள் யாவர்க்கும்)

..............ஆகிய நான் இப்பரீட்சார்த்தி எனது பாடசாலை ஆசிரியர் எனவும் 197.... ஆம் ஆண்டு ............மாதம்........ ஆந் திகதி எனது முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டாரெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

பாடசாலை அதிபரின் பெயர் :——————. முகவரி :——————.

பாடசாலை அதிபரின் கையொப்பம் :——————. திகதி :——————.

*12. பிரதேசக் கல்விப் பணிப்பாளரின்/பிரதம கல்வி அதிகாரியின் உறுதிப்பத்திரம் :

இப்பரீட்சார்த்தி தராதரப் பத்திரம் பெற்ற/தராதரப் பத்திரமற்ற பதவி வகிக்கும் ஆசிரியரெனவும் வேதனத்திட்ட ஒழுங்கின்படி வினைத் திறமைகாண் தடைப் பரீட்சைக்கு மேலாகச் சித்தியடைவதற்கு தமிழ் ஆசிரியர் பரீட்சையின் பகுதிகள் " ஆ " விலும் " இ " யிலும் சித்தியடைய வேண்டியுள்ளார்.

————————,
கல்விப் பணிப்பாளர்/பிரதம கல்வி அதிகாரி.

திகதி :————————.

*அறிவித்தலின் 3 (iii) ஆம் பந்தியிற் கூறப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு மட்டும்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

**பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகள்**

எல்லா பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர் :—

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தைபற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்து விடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமென பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும் ; எனினும் அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரச சேவைகள் ஆலோசனைச் சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

விதிகள்

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுது அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்ளையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்திற் பூரண அமைதி நிலவச் செய்யவேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம்பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமுஞ்செய்யக் கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்தாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக் கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந் தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ் விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரைமணித்தியாலத்துக்குப்பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர்தான பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர் ; செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்த வரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை, மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியனவற்றை ஒழுங்காகக் கீறிவிட வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கைவழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால், சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப்புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டியமாதிரி வர்ணப்பெட்டியையோ கணிதக்கருவிப் பெட்டியையோ விட கைப்பை, அழகுசெய் செப்பு, பார்சல், முதலியவற்றையோ கோவை அட்டை, கடதாசிமட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்பட மாட்டாது. எனினும், அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும் மீண்டுவரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ, பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறு ஒருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மைபற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல் பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையற்ற முறையில் உதவி செய்வது பாராதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுதற்குரிய தகுதியைப்பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்கு முன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக் கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல்வேண்டும் தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படக்கூடும். உண்மைபற்றிய சான்றுப் பத்திரங்களைக் கொண்டுவர மறந்து போனால் பரீட்சை முடியு முன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத் தாள், கண்ணரேகைத்தாள்,, பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப்பற்றி மேற்பார்ளையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக்கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசை மேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுபட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப்பென்சில்கள், வர்ணக் கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதிசெய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதும் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்கும் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக் கொடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடது பக்க அடைப்பில் வினுவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவருன இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப்படங்கள் கோட்டுருபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப்படத்தை அல்லது கோட்டுருபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை விடைத்தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமானால், அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்படவேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிபிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப் பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினுப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினுக்கள் தெரிவுக்குரிய வினுக்கள்பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும் அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும்வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத்தவறினுல் உமது விடைத்தாள் காணுமற்போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம்பற்றியும் சேவகனிடமோ பணியாளிடமோ விடைத் தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெற வேண்டினுல் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

போகொட பிரேமரத்ன,
பரீட்சை ஆணையாளர்.

பரீட்சைத் திணைக்களம்,
மலே வீதி, கொழும்பு 2.

12–718—21.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 91

---

**கல்வி அமைச்சு**

இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, கொழும்பு 10

**பயிற்சி நெறிகளுக்கு மாணவர்களைச் சேர்த்தல்—கல்லூரி ஆண்டு 1974**

**கவனத்திற் கொள்க :**

பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு மாணவர்களைச் சேர்த்தற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :—

| | பயிற்சி நெறி | மொழி | காலம் | நேரம் |
|---|---|---|---|---|
| 1. | உயர்தர தேசிய வர்த்தகத் தகுதித் தேர்வு .. .. | ஆங்கிலம் .. | 4 வருடம்.. | முழு நேரம்—பகல் |
| 2. | உயர்தர தேசிய மதிப்பீட்டுத் தகுதித் தேர்வு .. .. | ஆங்கிலம்/சிங்களம் .. | 4 வருடம்.. | 1 ஆம், 2 ஆம் வருடங்கள்—பகல்<br>3 ஆம், 4 ஆம் வருடங்கள்—மாலை |
| 3. | உயர்தர தேசிய கணக்கியல் தகுதித் தேர்வு .. .. | ஆங்கிலம் .. | 4 வருடம்.. | மாலை |
| 4. | செயலாண்மைத்துறை உயர்தொழில் பயிற்சி நெறி .. | ஆங்கிலம் .. | 4 வருடம்.. | முழுநேரம்—பகல் |
| 5. | செயலாண்மைத்துறை உயர்தொழில் பயிற்சி நெறி .. | ஆங்கிலம் .. | 4 வருடம்.. | மாலை |
| 6. | வங்கித்துறை உயர்தொழில் பயிற்சி நெறி .. .. | ஆங்கிலம் .. | 3 வருடம்.. | மாலை |
| 7. | போக்குவரத்துத்துறை உயர்தொழில் பயிற்சி நெறி .. | ஆங்கிலம் .. | 4 வருடம்.. | மாலை |
| 8. | உயர்தர சுருக்கெழுத்துப் பயிற்சி நெறி .. .. | ஆங்கிலம்/சிங்களம் .. | 1 வருடம்.. | மாலை |
| 9. | தச்சும் பொருத்தும் .. .. .. | சிங்களம் .. | 2 வருடம்.. | முழுநேரம்—பகல் |
| 10. | கட்டட வேலைத் தொழில்கள் .. .. .. | சிங்களம் .. | 2 வருடம்.. | முழுநேரம்—பகல் |
| 11. | பற்றவைப்பு .. .. .. | சிங்களம் .. | 6 மாதம்.. | முழுநேரம்—பகல் |

2. 5 ஆம், 6 ஆம், 7 ஆம், 8 ஆம் பயிற்சி நெறிகளுக்குத் தொடர்பான வேலையிலமர்ந்துள்ளவர்களுடைய விண்ணப்பங்களே அனுமதிக்கப்படும். அவ்விண்ணப்பங்கள் அவர்களை வேலைக்குக் கொண்டுள்ளவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். அத்தகைய விண்ணப்பங்களை அவர்கள் விதப்புரை செய்து அனுப்பும்போது விண்ணப்பதாரரின் வேலையின் தன்மைபற்றித் திட்டமாகக் குறிப்பிட வேண்டும். இவ்வொழுக்கங்களுக்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3. ஒரு வருடத்திற்கும் அதற்குக் குறைவான காலம் பயிற்சி நெறிக்கு விண்ணப்பக் கட்டணம் ஒரு ரூபாவாகும் (ரூபா 1) ; மற்றைய பயிற்சி நெறிகளுக்கு இரண்டு ரூபாவாகும் (ரூபா 2). இப்பெறுமானங்கள் கொண்ட முத்திரைகள் விண்ணப்பப் பத்திரங்களில் ஒட்டி, அவற்றின்மேல் விண்ணப்பதாரியின் கையொப்பமிட்டு செல்லுபடியாகாததாகச் செய்ய வேண்டும்.

4. தகவுத் திறன் நிபந்தனைகள் உட்பட சகல பயிற்சி நெறிகள் பற்றிய சகல விபரங்களும் இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் வர்த்தகத் தொழிற் பிரிவுகளால் வெளியிடப்படும் கைந்நூல்களில் கொடுக்கப்பட்டுள்ளன. இக்கைந்நூல்கள் கொழும்பு 1 பழைய செயலகத்திலுள்ள அரசினர் வெளியீடுகள் விற்பனை நிலையத்திலிருந்து நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்களை நிரப்புமுன் இக்கைந்நூல்களை வாசிக்குமாறு விண்ணப்பதாரிகளுக்கு ஆலோசனை கூறப்படுகிறது.

5. கீழே காணப்படும் மாதிரியான படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 1974.1.12 ந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கொழும்பு 10, இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரிப் பதிவாளருக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

6. உரிய பெறுமதிக்குக் குறைவாக முத்திரைகள் ஒட்டப்பட்ட அல்லது முற்றாகப் பூரணப்படுத்தப்படாத அல்லது உரிய படிவத்தில் சரியாக நிரப்பப்படாத அல்லது உரிய திகதிக்குப் பின் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

7. எல்லாப் பகுதி நேரப் பயிற்சி நெறிகளுக்கும், மாலை நேரப் பயிற்சி நெறிகளுக்கும் பின்வருமாறு கட்டணங்கள் அறவிடப்படும் :—

1. உயர் தொழிற் பயிற்சி நெறிகளுக்கும், தகுதித் தேர்வுப் பயிற்சி நெறிகளுக்கும் .. மாதம் 15 ரூபா ;
2. தொழில்நுட்ப மட்டப் பயிற்சி நெறிகளுக்கு .. .. ... மாதம் 10 ரூபா ;
3. கைப்பணி மட்டப் பயிற்சி நெறிகளுக்கு .. .. .. மாதம் 5 ரூபா.

கல்வி அமைச்சு,
மலே வீதி,
கொழும்பு 2.
1973 ம் ஆண் டிசம்பர் மீ 11 ந் உ.

ரீ. ஓ. பீ. பெர்னாண்டோ,
கல்வி வித்தியாதிபதி (தொழில் நுட்பம்),
மகா வித்தியாதிபதிக்காக.

(மாதிரி விண்ணப்பப் படிவம்—12″ × 8″)

**இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி—கல்வி ஆண்டு 1974**

**கவனத்திற்கொள்க** : இப்படிவத்தைப் பூர்த்திசெய்து, " பதிவாளர், இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி, கொழும்பு 10 " க்கு நேரடியாக தபால் மூலம் அனுப்பவேண்டும்.

1. வகுப்பு :————. பகல்/மாலை
2. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் (தடித்த எழுத்துக்களில்) :————.
3. பெயர் (முதலெழுத்துடன்) :————.
4. (அ) பிறந்த திகதி :————.
   (ஆ) 1.1.1974 ல் வயது : வருடம் :————. மாதம் :————. நாள் :————.
5. சாதியம் :————.
6. ஆண்/பெண் :————.
7. சொந்த முகவரி :————.
8. உத்தியோக முகவரி :————.
9. சித்தியடைந்த பரீட்சைகள்—(வருடம், மாதம், பாடங்கள் தாம் ஆகிய விபரங்கள் தரப்படுதல் வேண்டும்) :————.
10. விண்ணப்பதாரரின் தொழில், தொழில் புரியும் இடம், நேரம், முகவரி ஆகிய விபரங்கள் : (விண்ணப்பதாரர் செய்யும் தொழிலின் முழு விபரமும் கொடுக்கப்படல் வேண்டும்) :————.
11. தாய் தந்தையர்/பாதுகாவலரின் பெயர், முகவரி, தொழில் :————.
12. இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் சரியானவையென நான் இத்தால் உறுதியளிக்கின்றேன்.

| முத்திரை ஒட்டுவதற்கான கூடு |
| --- |

திகதி :————. ————
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

12–712—21.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 91

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிக்கப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க, விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை—1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| திசெம்பர் | 7.12.73 | வெள்ளி | 28.11.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 14.12.73 | வெள்ளி | 5.12.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 21.12.73 | வெள்ளி | 12.12.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 28.12.73 | வெள்ளி | 19.12.73 | புதன் | ந.ப. 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஒகத்து மீ 18 ந் தி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.